உ

சிவமயம்

# பத்திரசப் பிரார்த்தனைப் பாமாலை



"அம்மா நீ எனக்கு அரண்..."

ஆக்கம்: தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம்
வருத்தலைவிளான்,
தெல்லிப்பழை.

1998











# பத்திரசப் பிரார்த்தனைப்

# பாமாலை

1998

# சமர்ப்பணம்

மண்ணிற் பிறந்து மருட்கடலிற் றினங்குளித்து
மாட்சியிலாதே மதிகலங்கிப் பொறிவழிப்போந்
தெண்ணுக் கடங்காத தீவினைக ளைப்புரிந்து'
ஏற்றம் இலாதே இழியுமியா முய்திபெறப்
பண்ணும் பதப்பொலிவும் பாங்கான சீருமுறப்
பாடற் கினியனவாய்ப் பரசுகத்தைப் பயப்பனவாய்
நண்ணும் பாடல்களிவை காசிவிசு வேஸ்வரனார்
நறுமணப் பதமலரில் நயப்பொடு சமர்ப்பணமே!



இலக்கண வித்தகர், மகா வித்துவான்

தென் மயிலை

## இ. நமசிவாயதேசிகர்

உவந்தளித்த

# ஆசியுரை

'பத்திரசப் பிரார்த்தனைப் பாமாலை' என்னும் இந்நூல் ஆசிரியராகிய தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் அவர்கள் வீமன் காமம் மகா வித்தியாசாலையில் என்னிடம் சில வருடங்கள் கற்ற வர். இளமைக் காலத்திலேயே வறுத்தலைவிளான் மருதடி விநாயகரிடத்தில் பத்திபூண்டு ஒழுங்காக வழிபாடியற்றி வந்தவர். அதனால் வித்துவ சிரோன்மணி, பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களின் அருளுக்குப் பாத்திரமானவர். இயல்பாகவே பத்திப் பாடல்களியற்றும் வன்மையுடையவர். முன்பும் 'வருத்தலை விளான் மருதடி விநாயகர் தோத்திரம்' என்னும் பத்தி நூலை யாக்கி மேற்கூறிய விநாயகராலயத்தில் வெளியீடு செய்திருக்கின்றார்.

மனவெழுச்சிமிக்க அவ்வந் நேரங்களில் பாடித் திரட்டிய அவரது இந்நூலும் மன ஒருமையோடு இசை பொருந்தப் பாடுவார்க்கும் பாடக் கேட்பார்க்கும் செவிக்கும் உள்ளத்துக்கும் இனிமைதந்து பத்திப் பயன் விளைவிப்பதாகும். மெய்யடியார்கள் இதனாற் பயன்பெறுவார்களாக!

இ. நமசிவாயம்

தென்மயிலை
21.02.95

## திரு. தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம்
அவர்களின்

# பக்திரசப் பிரார்த்தனைப் பாடல்கள்

## அணிந்துரை

இலக்கிய ஆக்கங்கள் இரு வகைப்படுவன. வாழ்க்கையின் நேரடி அநுபவங்களூடாக உருவாகின்றவை ஒரு வகை. மரபு சார் நம்பிக்கைகளூடாக உருவாகின்றவை இன்னொரு வகை. திரு. தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் அவர்களின் இந்த ஆக்கம் மேற்படி இரண்டாவது வகையில் அமைவது. தெய்வ நம்பிக்கையினடியாக உருவான பாடல்களின் தொகுப்பு இது.

திரு. கோபாலசிங்கம் அவர்கள் தம் இளம் பராயம் முதலே பக்திச் சூழலில் வளர்ந்தவர். மகா வித்துவான் சி. கணேசையரின் அருளாசிபெற்ற அணுக்கத் தொண்டர்; தெய்வத் தலங்கள் மீது பக்திப்பாடல்கள் பாடுவதில மிகவும் ஈடுபாடுகொண்டவர். இவ்வகையில் பத்துக்கு மேற்பட்ட பிரபந்தங்கள் இவரால் பாடப்பட்டுள்ளன. இவற்றின் தொடர்ச்சியாகப் பக்திரசப் பிரார்த்தனைப் பாடல்கள் என்ற இந்த ஆக்கம் உருவாகியுள்ளது. பிள்ளையார், சிவன், முருகன், காளிகாதேவி, நாகபூஷணி, முத்துமாரியம்மன், இராமபிரான் முதலான பல்வேறு தெய்வங்கள் மீதும் பாடப்பட்டுள்ள பாடல்களின் தொகுப்பு இது. புராணங்கள், பக்தி இலக்கியங்கள் மற்றும் கிராமிய வழிபாட்டு மரபுகள் ஆகியவற்றின் மீது ஆசிரியருக்குள்ள ஈடுபாட்டையும் நம்பிக்கையையும் இப்பாடற் பரப்பிற் கண்டுணரலாம்.

பக்திப் பாடல்களுக்கு இன்றியமையாத பண்பு அவற்றின் இசைநயம், இதயத்தை இசைவிக்கத் துணை நிற்பது அது. இப்பாடல்களில் இசைப் பண்பு ஓரளவு பயின்றுள்ளது. பிரார்த்தனைப் பாடல்களின் முக்கிய பண்பு பலர் கூட்டாகப் பாடுவதாகும். இதனைக் கூட்டுப் பிரார்த்தனை முறை என்பர். இம்முறைமையில் ஒருவர் தொடக்கிவைக்க மற்றவர்கள் அதைத் தொடருவர். இந்தப் பாடற் பரப்பிலும் மேற்படி கூட்டுப்பிரார்த்தனைப் பண்பு பயில்கிறது.

இப்பாடல்களைப் படிப்பவர்களின் இதயம் இறைபக்தியில் ஒன்றிவிடவேண்டும் என்பது ஆசிரியரின் எதிர்பார்ப்பாகும்.

படிப்பவர் இதயம் ஒன்றிப்
பாடுவார் கேட்பா ரெல்லாம்
நொடிப் பொழுதினிற்றம் நெஞ்சம்
நுவலுமோ திராகங் கொண்டே
பிடிப்பொடும் பாடிப் பாமப்
பிரசமென் மலர்த்தாள் போற்றி
விடுப்பர்தீ வினைகள் யாவும்
விமலர்தம் அருளி னாலே.

என்பது முகவுரையில் அவர் தந்துள்ள குறிப்பு. இந்த எதிர்பார்ப்பு நிறைவெய்தும் என நம்புவோமாக!

சமகால அவலங்களால் அல்லலுற்று அலைபாயும் நெஞ்சங்களுக்குத் தெய்வ நம்பிக்கையூடாக ஒரு கண நேரமாயினும் ஆறுதல் அளிக்க இப்பாடல்கள் துணைநிற்குமாயின் அதுவே இப்பாடல்களின் வெற்றியாகும்.

கலாநிதி நா. சுப்பிரமணியன்
(B. A (Cey.), M. A. (Pera.), Ph. D (Jaffna)
இணைப் பேராசிரியர், தலைவர்,
தமிழ்த்துறை
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

31-10-1997

# மதிப்பீட்டுரை

*மகா வித்துவான் சி. கணேசையர் அவர்களுடைய அன்புக் குரிய ஒருவர் வித்தகன் திரு. தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் அவர்கள்.*

இவருடைய இறைபக்தியும், பக்தியாற் பாடப்படும் பாமாலைகளும் தனித்துவ ரசனை மிக்கவையாயுள்ளன. முன்பு வெளி வந்த வித்தகனாருடைய ஊஞ்சற் பாக்கள், நீர்வை செல்லக் கதிர்காமக் கந்தன் தோத்திரங்கள், பக்திப் பாடல்கள் யாவற்றையும் படித்த எமக்கு இன்றைய வித்தகனாரின் பக்தி ரசப் பிரார்த்தனைப் பாடல்கள் படிக்கும்போது பக்கத்திலிருந்து கேட் போரும் பரவசப்பட்டு ஆடவோ பாடவோ, இறைவனை நினைந்து மனங் குதூகலிக்கவோ கூடிய விதத்தில் அமைந்துள்ளமை சிறப் புடைத்தாகும்.

ஒருவர் பாட, சேர்ந்திருப்போரும் பாடும் பஜனை, கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்களாக இப்பக்தி ரசப் பிரார்த்தனைப் பாடல்கள் அமைந்துள்ளன. விநாயகர், சிவன், முருகன், அம்மன் பாடல்களாகவும் இராமபிரான் பாடலும் சேர்ந்திருப்பது காலத்திற்கேற்ப அவ்வப்போது ஆலயங்களிலும், வழிபாடுகளிலும், தனித்தும் சேர்ந்தும் பாடி வழிபடுவோருக்குப் பயன்மிக் குடையனவாயமைந்துள்ளன. மேலும் இவருடைய பாடல்களில் அம்மன் துதிப்பாடல்களாயுள்ளவை பத்திநிலையின் உச்சநிலையையும், பாடும்போது பாடுபவர்களும் தம்மை மறந்து மனம் ஒருப் படும் நிலையையும் உணர்த்துவனவாயமைந்துள்ளன.

அரகரோகரா! ஸ்வாமி அரகரோகரா! என ஆரம்பித்து முதலில் பிள்ளையாரை வேண்டுதல் செய்து அவரைச் சரணடைந்து, பரமசிவனாருக்குப் பாமாலை சூட்டி, ஆத்ம சக்கரத்தை அழகாகப் பாடி, கலியுகவரதனாம் கந்தப் பெருமானை கலியின் துயர் போக்கிட வேண்டி, அன்னை பராசக்தியின் அன்பின் பிடியில் - தாயின் சிறப்பைத் தண்ணளியாய்ப் பாடி, கீதோபதேசஞ் செய்த கிருஷ்ணனை 'ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா' என உள்ளன்போடு அழைத்து, வேண்டும் இடங்களில் விருப்போடு வேண்டி அழும் சிறு குழந்தைகள் போல ஆங்காங்கே தகுந்த அழகு தமிழில், எளிய நடையில் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் பக்திப் பரவசமேற்படும் விதமாக வித்தகன் கோபாலசிங்கம் அவர்கள் யாத்துள்ள பக்தி ததும்பும் பிரார்த் தனைப் பாடல்களின் ரசனையும், இனிமையும் அதற்கேற்ற

ஓசை நயமும் - அவரின் ஆழ்ந்த இறைபக்தியையும் அதனை அனைவருடனும் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்ற பரந்த நன் மனப்போக்கையும் தெளிவாகப் படிப்பவர்கட்கு உணர்த்துவனவாயுள்ளன.

ஓரிடத்தில் வித்தகனாரின் வேண்டுதல்:

> அண்ணன் தம்பி தங்கையரைப் பேணவேண்டும்
> அன்புநிறை நல்லவரைக் காணவேண்டும்
> தண்மையுள அன்னையிவை யீந்துவிட்டால்
> தரணியிலே யாமெதற்கோ அஞ்சவேண்டும்!

என்றவாறு அமைகின்றது.

அவருடைய உள்ளக் கிடக்கையை ஆங்காங்கு பலவிடங்களில் அழகொளிரப் பாடிப் பக்திப் பரவசமாகப் பிரார்த்திக்கின்றார். அவர் பிரார்த்தனையில் நாமும் உடன் கூட்டுப் பிரார்த்தனையாக இணைந்து அவர் பணி சிறக்க வாழ்த்தி மகிழ்வோம்.

நீர்வை மணிதியாகராச சர்மா

செல்லக்கதிர்காம சுவாமி
தேவஸ்தானம்,
நீர்வேலி 10.02.98

# முகவுரை

மக்கள் உலகியலின் அழுந்திப் பயனற்ற மாற்றங்களைத் தேடியலைந்து அவலமுறுகின்றனர். இத்தகையோரின் உய்ர்விற்கான இறையருள் கைகூடுவதற்குத் தியான யோகமும் ஞான மார்க்கங்களும் பயன்றருதல் கடினம்.

இதேபோன்று, ஆலயங்களில் இயற்றப்படுங் கிரியைகளும் அநுட்டானங்களும் நாடிநிற்கும் பயனைத் துய்ப்பதற்கு ஏற்புடையதாகக் காணோம். எனவே இறையருள் பெற்று மக்கள் ஈடேற்றமடைவதற்குச் சுலபமானதும் தெளிவானதும் ஆகிய வழிமுறையொன்றைப் பின்பற்றிச் செயற்படுதல்பயன்மிக்கதாகும்.

இவ்வகையில் இறைவனோடு எம்மைச் சேர்க்கவல்ல, அவன் புகழ் பரவும் பக்திப் பாடல்களைப் பாடிப்பணிதல் தக்க வழியாகும், இந்நெறியில் நாம் வயப்படும்போது, எம் நெஞ்சகத்து இறையருள் உதித்து மெய் சிலிர்க்க ஓர் ஒலிவெள்ளம் ஊற்றெடுத்துப் பாய்கிறது. இப்பிரவாகத்தில் எம்மைப் பிணித்திருக்கும் அகங்கார மமகாரங்கள் சிதறி மாய்கின்றன. இதனால் ஆன்மா புனிதமாகி அவன் உள்ளம் இறைவன் கொலுவிருக்குங் கோயிலாகின்றது.

கலியுகத்தின் தாக்கத்தினால், மக்களகத்து இறையுணர்வு குன்றி, மெய்ந்நெறியை உணர்ந்திலராய் மனிதப் பிறப்பின் நோக்கத்தை ஈடுசெய்யவியலாது தவிப்புறுகிறோம். இறைபக்தி எம்முட் கருக்கொண்டு, நாம் ஈடேறுவதற்கு அவனைத் தத்தம் மொழியிலேயே விளக்கமுறப் பாடி, அதனால் உயிர்ப்பெய்தி, உள்ளமுருகிப் போற்றிப் பணியும்போது இறையருள் வந்து வாய்த்தல் உறுதியாகும். இதனாலேயே மூவர் முதலிகளும் தத்தம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் இறையன்பைத் தங்கள் தேவாரப் பாமாலைகளால் சூட்டி இன்புற்றுப் பெரும்பேறெய்தினர்.

நாம் படித்தவர், பாமரர், நாதியற்ற அநாதைகள், அகங்குழைந்துருகிப் பாமாலை சூட்டுவார் பண்ணொடும பாடிப் பாடிப் பரவசமுறுவார், அதைப் பார்த்துங் கேட்டும் கிறுகிறுத்துத் தாமும் பாடுவார், ஆடுவாராகப் பல திறத்தவராகவுமுள்ளோம். எண்ணரிய பிறவிகளை எடுத்தெடுத்து மேலோங்கிய பெற்றியினால், சிந்தை உந்துமாவாறு பாடல்களைத் தெரிந்து, தெரிந்து பாடித் தத்தம் மன எழுச்சிகளைக் கொட்டி இறை முன்றலில் அமைதி பெறுகிறோம்.

இந்நூலின்கண் பல வகையான பாடல்கள் அமைந்துள்ளன. எம்மையுமறியாமலே எம்முள்ளத்தில் பீறிட்டு வெளிப்பட்ட சில பகுதிகளும் அமைகின்றன. அம்மன் பாடல்களிலும், ஏனையவற்றிலும் சில பகுதிகள் அவ்வண்ணம் உருப்பெற்றவையே. தத்துவத்தில் நீ பெரிய ஓங்காரி ...., பாடாத நாளில்லைத் தாயே , எண்ண எண்ண இனிக்கு மின்பப் பழமே –, அம்மா நீ எனக்கு அரண் , வேதனைகள் தீர்த்திடுவாய் தாயே – என வரும் பாடல்களும் இத்தகையனவே. அம்மன் பாடல்களில் முதற்கண் வருவதாகிய ''காடுஞ் செடிகளும் உன் கோயில், ஆடிடும் ஆட்டங்கள் ஆயிரமாம் என்பன போன்றவை புராதன வழிபாட்டு முறையில் வந்தமைந்தவையே.

இதேபோன்று, ஆத்ம சக்கரம் என்னும் பகுதியும் இணைந்துள்ளது. உலக பந்தங்களில் அழுந்தி, உண்மையை உணராது உழலும் பசுக்களாகிய ஆன்மாக்கள், தம்மையும் தம்மைப்பிணித்து நிற்கும்பாசத்தையும் உணர்ந்து யாவற்றையும் ஆட்டிப் படைக்கும் பதியாகிய இறைவனின் சக்சரத்துள் இயைந்து இயங்கும்பொழுதே உண்மை நிலையுறுவர்; உயர் நிலையடைவர். இத்தன்மையை எய்தித் தன்அறிவு பெற்று, அவ்வாத்ம சொரூபத்தையே ஆத்ம சக்கரமாக, ஆக்ஞா சக்கரமாகக் கொண்டு அதன் ஏவலின் பிரகாரம் ஒருவன வாழத் தலைப்படின், அவனகத்து ஈசனும் அதுவே ஈசுவரியும் அதுவே; தெய்வமும் அதுவே. தெளிந்த தூவெளியும் அதுவேயாம்.

தங்கியுள்ளத் துண்ணிறைந்த தர்ம ஆத்ம சக்கரமாம்
சாசுவத மானசத்யத் தேவனுக்கு மங்களம்!

அன்பர்களே, இறையடியார்களே, பக்திகொண்டு இப்பாடல்களை உண்மை உணர்வோடும் பாடிப்பாடித் திருவருள் மேவப்பெற்றுப் பக்திப் பயன்பெற்றுய்ய இறை துணை நிற்பதாக!

படிப்பவர் இதயம் ஒன்றிப்
பாடுவார் கேட்பா ரெல்லாம்
நொடிப்பொழு தினிற்றம் நெஞ்சம்
நுவலுமோ ரிராகங் கொண்டே
பிடிப்பொடும் பாடிப் பாடிப்
பிரசமென் மலர்த்தாள் போற்றி
விடுப்பர்தீ வினைசள் யாவும்
விமலர்தம் அருளி னாலே!

தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம்

# நெஞ்சிலிருந்து....

## இலக்கண வித்தகருக்கு...

மத்தகந் தனைநி கர்த்த மாண்மிகு மறிஞர் கற்றார்
மனத்தொடு போற்றும் மாசில் மனத்தர்சான் றாண்மை பூண்டே
நித்தமுந் தமிழா ழிக்கண் நீந்தியே யறிவை யேற்றும்
நீர்மையர் தொன்மை வாய்ந்த செழுந்தமி ழிலக்க ணத்தில்
வித்தகர் நமசி வாய தேசிகப் பெயர்கொள் ளாசான்
விருப்பொடெற் காசி தந்தார் விநயமோ டன்னார் தம்மை
மெத்தவும் பணிந்தென் நன்றி யினையிவன் செப்ப லன்றி
வேறிவர்க் கொருகைம் மாறு செயற்கில்லை யென்செய் வேனே!


## தமிழ்த்துறைத் தலைவருக்கு...

பிரம்மத்தின் சூத்தி ரத்தைப் பிழையறப் படித்த றிந்து
பிராமணப் பெருமை பூத்த பெரியவோ ராசா னாகிப்
பரம்பொருள் படைத்த பாரா ரியாவரு மொன்றே யென்ற
பகுத்தறி வதுவும் விஞ்சப் பெற்றநற் குரிசி லெற்குக்
கரம்எடுத் தணிந்து ரையொன் றளித்தசெம் மைத்தோன்
யாழ்ப்பல்
கலைக்கழ கத்தின் பெட்பார் தமிழ்த்துறைப் பெருந்த லைவர்
சிரங்குனிந் திவர்க்கு நல்கும் என்நன்றிக் குரித்தோ னாய
சீர்கெழு சுப்ர மணியப் பெயர்பெறு கலைவல் லோனே!

## நீர்வை, பிரம்மஸ்ரீ தியாகராசக் குருக்களுக்கு...

தில்லையிற் கூத்தன் செம்பொற் சடையனின் பெயரைக் கொண்ட
தியாகரா சக்கு ருக்கள் தினம்முரு கர்க்குப் பூசை
எல்லையில் ஆர்வத் தோடு மியற்றிடு மெழிலார் யானிங்
கியற்றிய பாடற்கேற்ற வகைமதிப் பீடு செய்தார்
நல்லதன் மனத்தால் நாடி பார்த்தெனக் குவந்து செய்த
நற்செயற் கன்னார்க் கென்றும் நலன்கள்சேர் புலங்கள் சேர
வல்லவெம் மீசன் பாதம் வழுத்தியே பணிந்தென் நன்றி
வழங்குவேன் வழுத்துகின்றேன் வாதிடா தேற்று மாறே!

# பத்திரசப் பிரார்த்தனைப் பாமாலை



**காப்பு**

பெருத்தமரு தின்குமிழில் பேரருள் பொழிந்திடவெம்
வருத்தலைவீ லென்றுமொளிர் மாகனிறே —கருத்தொடொரு
கண்ணின் இமைபோலிக் கவிக்கோத்தை நீகாப்பாய்
பண்ணும் பதமும் பயந்து.

# பத்திரசப் பிரார்த்தனைப் பாடல்கள்

## பிள்ளையார்

அரக ரோகரா ............ அரக ரோகரா
அரக ரோகரா ஸ்வாமி அரக ரோகரா

ஐந்துகரத் தண்ணலுக் கரக ரோகரா
அன்பர்களின் அன்பருக் கரக ரோகரா
முந்திமுந்தி விநாயகருக் கரக ரோகரா
மூலக்க ணபதிக் கரக ரோகரா
சிந்தைகுடி கொண்டவருக் கரக ரோகரா
சித்திதந் தணைப்பவருக் கரக ரோகரா

அரக ரோகரா............ அரக ரோகரா
அரக ரோகரா ஸ்வாமி அரக ரோகரா

கண்மூன்று டையவருக் கரக ரோகரா
கருத்திற்றெ ளிபவருக் கரக ரோகரா
விண்ணுந்து திப்பாருக் கரக ரோகரா
வேதமுதல் வித்தகருக் கரக ரோகரா
எண்ணுமெழுத் துந்தருவார்க் கரக ரோகரா
ஏகதந்த னானவருக் கரக ரோகரா
கண்ணிறைந்த காவலருக் கரக ரோகரா
கற்பகவி நாயகருக் கரக ரோகரா

அரக ரோகரா ........ அரகரோகரா
அரக ரோகரா ஸ்வாமி அரகரோகரா

நாதவிந்து ரூபனுக் கரக ரோகரா
ஞானமு தல்வனுக் கரக ரோகரா
பூதகணஞ் சூழ்பவருக் கரக ரோகரா
புத்தொளிப யப்பவருக் கரக ரோகரா
வேதவித்தி யாதரருக் கரக ரோகரா
வேழமுக வேந்தனுக் கரக ரோகரா
பாதமீந் தணைப்பவருக் கரக ரோகரா
பரபோத நாயகருக் கரக ரோகரா

அரக ரோகரா ........ அரகரோகரா
அரக ரோகரா ஸ்வாமி அரகரோகரா

ஒங்கார மூர்த்தியருக் அரக ரோகரா
உள்ளொளிதந் துயர்விப்பார்க் கரக ரோகரா
ஆங்கார கணபதிக் கரக ரோகரா
அத்திமுகத் தென்றலுக் கரக ரோகரா
நீங்காத நிறைவானார்க் கரக ரோகரா
நித்தியசு கந்தருவார்க் கரக ரோகரா
தூங்கா துயிர் காப்பார்க் கரக ரோகரா
தூய்களிற்று மாமுகனுக் கரக ரோகரா!

வேறு

பிள்ளையாரே ...................பிள்ளையாரே—என்னைப்
பாடவையும் ஆடவையும் பிள்ளையாரே
கண்மூன்று டையவரே பிள்ளையாரே—உன்னைக்
காணவையும் பேணவையும் பிள்ளையாரே
கைநான்கு கொண்டவரே பிள்ளையாரே—தும்பிக்
கையொன்றுங் கொண்டவரே பிள்ளையாரே
ஐங்கோண சக்கரத்தில் பிள்ளையாரே—உனக்
கனுதினமும் பூசைவைப்பேன் பிள்ளையாரே
என்போன்ற வர்பலரும் பிள்ளையாரே—உன்னை
ஏத்தியடி போற்றுகின்றார் பிள்ளையாரே
பண்சேர்ந்த பாக்களினால் பிள்ளையாரே—உன்னைப்
பாடினும்நான் தேடினும்நீ பார்ப்பதில்லை
அண்ணார்ந்து பார்த்திடினும் பிள்ளையாரே—உன்னை
அங்குமெங்கும் வான்முகட்டில் தெரிவதில்லை
உண்ணாய்ந்து பார்த்திடுவேன் பிள்ளையாரே—எந்தன்
உள்ளொளியிற் றோன்றுமையா பிள்ளையாரே
கண்மூடி யானிருப்பேன் பிள்ளையாரே—உள்ளக்
கட்புலத்திற் றோன்றுமையா பிள்ளையாரே
என்புருக வாயாலே பிள்ளையாரே—நானும்
எத்தனைநாள் கூவினும் நீ கேட்பதில்லை!
அன்பார்ந்த நெஞ்சினினாற் பிள்ளையாரே—உன்னை
அண்டிவிட வுன்னருளைத் தந்திடையா
என்சோர்ந்த கைகளினாற் பிள்ளையாரே—உன்னை
எட்டித்தொடக் கிட்டுமையா பிள்ளையாரே
மின்னார்ந்த வேதகமே யென்மனத்தை—நீயும்
பொன்னாக்கி வையுமையா பிள்ளையாரே
ஓம்என்ற மந்திரத்தில் பிள்ளையாரே — உன்னை
ஒலிவடிவிற் காணவையும் பிள்ளையாரே
ஓம் என்ற மந்திரத்தை ஓதிநிற்பேன் — அந்த
ஓங்கார மாண்பை யெனக் கோதுமையா!

பிள்ளையாரே ............ பிள்ளையாரே — என்னைப்
பாடவையும் ஆடவையும் பிள்ளையாரே!

சரணம்!

| | | |
|---|---|---|
| கயமுக கணபதி | சரணம் | சரணம் |
| கரமைந் துடையவ | சரணம் | சரணம் |
| நயமுற வருபவ | சரணம் | சரணம் |
| ஞானக் கணபதி | சரணம் | சரணம் |
| தயவுடை யைம்முக | சரணம் | சரணம் |
| தண்ணொளி தருபவ | சரணம் | சரணம் |
| பயந்தீர்த் தருள்பவ | சரணம் | சரணம் |
| பாபவி நாசா | சரணம் | சரணம் |
| அத்தி முகத்தவ | சரணம் | சரணம் |
| அரகர கணபதி | சரணம் | சரணம் |
| சித்திகள் தருபவ | சரணம் | சரணம் |
| தீமைகள் கடிபவ | சரணம் | சரணம் |
| புத்தி பயப்பவ | சரணம் | சரணம் |
| புண்ணிய புருடா | சரணம் | சரணம் |
| பத்தி தருபவ | சரணம் | சரணம் |
| பரபதம் அருள்பவ | சரணம் | சரணம் |
| வெற்றி தருபவ | சரணம் | சரணம் |
| விக்ன விநாயக | சரணம் | சரணம்! |

## சிவபெருமான்

அரக ரோகரா........................ .......அரக ரோகரா
அரக ரசிவ அரக ரசிவ அரக ரோகரா!

| | | |
|---|---|---|
| ஆதிபர மேஸ்வரருக் | கரக | ரோகரா |
| அருவுருவா யிருப்பவருக் | கரக | ரோகரா |
| ஓதியுணர் தற்கரியார்க் | கரக | ரோகரா |
| ஒப்பிலாப்ப ரம்பொருளுக் | கரக | ரோகரா |
| வேதமந்தி ரப்பொருளுக் | கரக | ரோகரா |
| வேதாந்த மெய்ப்பொருளுக் | கரக | ரோகரா |
| நாதவடி வானவருக் | கரக | ரோகரா |
| நாதாந்த சோதியினுக் | கரக | ரோகரா |
| பூதகணஞ் சூழ்பவருக் | கரக | ரோகரா |
| புத்தொளித ருபவருக் | கரக | ரோகரா |
| சத்யவடி வானவருக் | கரக | ரோகரா |
| சங்கரன் சதாசிவனுக் | கரக | ரோகரா |

நித்தியசு கப்பொருளுக் கரக ரோகரா
நீள்வினைகெ டுப்பவருக் கரக ரோகரா
எத்திசையும் ஆனவருக் கரக ரோகரா
எமபயம றுப்பவருக் கரக ரோகரா

அரக ரோகரா.............................அரக ரோகரா
அரக ரசிவ அரக ரசிவ அரக ரோகரா!

அனலேந்தி ஆடுபவர்க் கரக ரோகரா
அனைத்துமழித் தாள்பவரு கரக ரோகரா
புனலேந்து சடையனாருக் கரக ரோகரா
புண்ணியபு ருடனுக் கரக ரோகரா
உடுககேந்தி யாடுபவர்க் கரக ரோகரா
உலகியக்கும் பெருமானார்க் கரக ரோகரா
மானேந்தும் மாட்சியருக் கரக ரோகரா
மழுவேந்து மீசுவரர்க் கரக ரோகரா
அபயகரச் சுந்தரருக் கரக ரோகரா
ஆருயிர்கள் துணையாவார்க் கரக ரோகரா
திரிசூல நாயகருக் கரக ரோகரா
திக்கெட்டும் தானானார்க் கரக ரோகரா
அரியயனுக் கெட்டாதார்க் கரக ரோகரா
அங்கிங்கெங் கும்நிறைவார்க் கரக ரோகரா
பொங்கரவம் பூண்டவருக் கரக ரோகரா
பொற்பாத நாயகருக் கரக ரோகரா
இந்துமுடிப் பெருமானுக் கரக ரோகரா
இகபரசு கந்தருவார்க் கரக ரோகரா

அரக ரோகரா..............................அரக ரோகரா
அரக ரசிவ அரக ரசிவ அரக ரோகரா

நன்மை தீமை யானவருக் கரக ரோகரா
ஞானப்ப ரம்பொருளுக் கரக ரோகரா
உண்மை யினிமை யானவருக் கரக ரோகரா
உயிர்க்குயிரா யுறைபவருக் கரக ரோகரா
சத்து சித்தா யிருப்பவருக் கரக ரோகரா
சர்வானந் தப்பரனுக் கரக ரோகரா
சிதம்பர நடராசருக் கரக ரோகரா
தில்லைப்பெருங் கூத்தனுக் கரக ரோகரா
அண்ட பிண்ட மானவருக் கரக ரோகரா

அத்துவித மெய்ப்பொருளுக் கரக ரோகரா
பண்டைப் பரம்பொருளுக் கரக ரோகரா
பலவாயொன் றாயிருப்பார்க் கரக ரோகரா
ஐந்தொழிற்கு மதிபதிக் கரக ரோகரா
அம்மையப்ப னானவருக் கரக ரோகரா
ஐந்தெழுத்தி லாடிடுவார்க் கரக ரோகரா
அரக ரசிவ அரக ரசிவ அரக ரோகரா
சிந்தைகுடி கொண்டவருக் கரக ரோகரா
சிரித்துமுப் புரமெரிப்பார்க் கரக ரோகரா
பற்றறுக்கும் பரனாருக் கரக ரோகரா
பரலோக நாயகனுக் கரக ரோகரா
முக்குணங்கள் தேய்ப்பவருக் கரக ரோகரா
மூலப்ப ரம்பொருளுக் கரக ரோகரா
சிற்சபைநட ராசருக் கரக ரோகரா
சின்மயா னந்தனுக் கரக ரோகரா
மாயையை யறுப்பவருக் கரக ரோகரா
மயானத்தில் ஆடுவாருக் கரக ரோகரா
கன்மவினை கடிபவருக் கரக ரோகரா
காமாதிகள் கெடுப்பார்க் கரக ரோகரா
ஆணவம றுப்பவருக் கரக ரோகரா
ஆங்கார ருத்திரருக் கரக ரோகரா
முந்தைவினை தீர்ப்பவருக் கரக ரோகரா
முத்திதந் தணைப்பவருக் கரக ரோகரா

அரக ரோகரா........ ........ ......அரக ரோகரா
அரக ரசிவ அரக ரசிவ அரக ரோகரா

ஓம்குருநாதா ஓம்குருநாதா ஓம்குருநாதா ஓம்
ஓம்குருநாதா ஓம்குருநாதா ஓம்சிவநாதா ஓம்

மன்னுமுயிர் தானாவான் எங்கள் சிவ நாதன்
மனாதிகளுக் கெட்டானாம் எங்கள் சிவ நாதன்
தன்னையெமக் குணர்விப்பான் எங்கள் சிவ நாதன்
தனிப்பொருள்தா னாயிருப்பான் எங்கள் சிவ நாதன்
முன்னைவினை தீர்த்திடுவான் எங்கள் சிவ நாதன்
முக்குணங்கள் போக்கிடுவான் எங்கள் சிவ நாதன்
நன்மைதீமை யானவனாம் எங்கள் சிவ நாதன்
நாதாந்த மெய்ப்பொருளாம் எங்கள் சிவ நாதன்
இன்மையுமுண் மையுமாவான் எங்கள் சிவ நாதன்
இதயவெளிக் குள்ளொளிர்வான் எங்கள் சிவ நாதன்

தத்துவத்துக் குள்ளிருப்பான் எங்கள் சிவ நாதன்
தத்துவங்கள் தானாவான் எங்கள் சிவ நாதன்
சத்தியமே தானாவான் எங்கள் சிவ நாதன்
சத்தியத்தில் நிலைக்க வைப்பான் எங்கள் சிவ நாதன்
ஓம் குரு நாதா ஓம்......

நித்தியப்பொருள் தானாவான் எங்கள் சிவ நாதன்
நினைந்துநினைந் துருகவைப்பான் எங்கள் சிவ நாதன்
பத்திமை பெமக்கருள்வான் எங்கள் சிவ நாதன்
பரவெளியாய்த் தானிருப்பான் எங்கள் சிவ நாதன்
மோகங்கெடுத் தாள்பவனாம் எங்கள் சிவ நாதன்
மோட்சகுரு தானாவான் எங்கள் சிவ நாதன்
மும்மலமொ ழித்திடுவான் எங்கள் சிவ நாதன்
முத்திதந் தணைத்திடுவான் எங்கள் சிவ நாதன்

ஓம் குருநாதா ஓம் குருநாதா ஓம் குருநாதா ஓம்
ஓம் குருநாதா ஓம் குருநாதா ஓம் குருநாதா ஓம்
ஓம் சிவ சிவ சிவ ஓம் சிவ சிவ சிவ ஓம் சிவநாதா ஓம்
ஓம் சிவாயநம ஓம் சிவாயநம ஓம் சிவநாதா ஓம்!

## வேறு

உள்ளமெனுங் கோயிலிலே உறைகின்ற தெய்வமே
கள்ளமிலா நெஞ்சினரைக் காத்தருளுந் தெய்வமே
அன்புவெள்ளந் தன்னிலே அலைபாயுந் தெய்வமே
ஆடிநின்ற ருள்சொரியும் ஆனந்தத் தெய்வமே
அன்பருள்ளக் கோயிலிலே அமர்கின்ற தெய்வமே
அப்பாலுக் கப்பாலாய் ஆடியுயர் தெய்வமே
வஞ்சமிலா நெஞ்சினரை வாழவைக்குந் தெய்வமே
வர்க்கபே தங்கடந்தே வரமருளுந் தெய்வமே
வெள்ளையுள்ளக் கோயிலிலே வேர்கொண்ட தெய்வமே
வேதவ ரம்பிகந்த வெளியான தெய்வமே
அன்பரித யங்களிலே யமைதிகொள்ளுந் தெய்வமே
அசையாத நன்மனத்தின் அடியிலுறை தெய்வமே
வன்மங்கள் போக்கிவிடும் வளரொளியாந் தெய்வமே
வாடாமலர்போன்றே வனப்பெய்துந் தெய்வமே

அன்பேதான் கோயிலடா — அதன்
அகக்காட்சி தெய்வமடா
உள்ளந்தான் கோயிலடா — அதன்
உட்காட்சி தெய்வமடா

வெள்ளைமனங் கோயிலடா — அதன்
வெளியெல்லாம் பூதமடா
உள்ளிருக்கும் தெய்வமடா — அதை
உருக்கி நீயும் பாரெனடா!
— உள்ளமெனுங் கோயி........

துருப்பிடித்த உள்ளமதை — நீயும்
துப்புரவு செய்யெனடா
கறைபடிந்த உள்ளமதில் — நல்ல
கர்ப்பூரம் எரியெனடா
சகதிநிறை மனதினுக்கே — வாசச்
சாம்பிராணி போடெனடா
அரக்ககுணம் போக்கியுள்ளே — ஓர்
ஆரத்தி காட்டெனடா
— உள்ளமெனுங் கோயி........

தீயகுணம் போக்கிடவே — அங்கு
திரு விளக்கு வையெனடா
ஆணவத்தைக் கொன்றுவிட — ஓர்
அகவிளக்குக் கொழுத்தெனடா
அகவிளக்கில் தானொளிரும் — அந்த
அருளொளியே தெய்வமடா
அருளொளியே தெய்வமடா — அஃதே
அறிவொளியும் ஆகுமடா
— உள்ளமெனுங் கோயி........

மனச்சாட்சி தெய்வமடா — நீயுன்
மடைக்குணங்கள் ஓட்டுமெடா
தெருத் தெருவாய்த் திரிந்திடினும் — அங்கு
தெய்வமதே யில்லையெடா
உருக் கொடுத்துப் பாரெனடா — உந்தன்
உள்ளத்துள் தேடெனடா
— உள்ளமெனுங் கோயி........

அருச்சனைப் பொருட்களை நீ — உந்தன்
அகப் பரப்பில் வையெனடா
சர்க்கரைப் பொங்கலையும் — நீ
சந்நிதியிலே வை யெனடா
நிர்க்கதியாங் கில்லையெடா — நீயுன்
நினைவிழந்து நிற்பையெடா — நீயுன்

ஆங்கண்..................
உச்சத்தில் ஒளியேறும் — அங்கு
உண்மைச்சுகம் தான்றெரியும்
சொர்க்கச் சுகம் அதனை — அகச்
சோதியிலே காண்டிடலாம்
அமைதிப்பூம் பந்தரிலே — நீயும்
அமர்ந்திருத்தல் ஆகுமடா
ஏகப் பெருவெளியில் — நீயும்
எல்லாம் மறந்திரெடா!

உள்ள மெனுங் கோயிலே உறைகின்ற தெய்வமே!
கள்ள மிலா நெஞ்சினரைக் காத்தருளுந் தெய்வமே!

## ஆத்ம சக்கரம்

ஆத்மசக்கரம் .................. ஆத்மசக்கரம்
அகத்துணையாய் வழிகாட்டும் ஆத்மசக்கரம்
ஆத்மவுணர் வின்றெளிவே ஆத்மசக்கரம்
அரும்பொருள் துலக்குமொளி ஆத்மசக்கரம்!

ஆபத்தில் வந்துதவும் ஆத்மசக்கரம்
அச்சமெலாம் போக்கிவிடும் ஆத்மசக்கரம்
உள்ளத்தைத் தட்டுவது ஆத்மசக்கரம்
உயர்வான சிந்தை தரும் ஆத்மசக்கரம்
பற்றுகளைக் குறைத்துவிடும் ஆத்பசக்கரம்
பரிவுடைய பார்வைதரும் ஆத்மசக்கரம்
தாபங்கள் போக்கிவிடும் ஆத்மசக்கரம்
தருமநெறி காட்டிவிடும் ஆத்மசக்கரம்
புன்றொழில்கள் போக்கிவிடும் ஆத்மசக்கரம்
புரைகளைப்பொ டியாக்கும் ஆத்மசக்கரம்
வன்மமெலாம் போக்கிவிடும் ஆத்மசக்கரம்
வாதமிடும் வாயடக்கும் ஆத்மசக்கரம்
கோபங் கெடுத்தாளும் ஆத்மசக்கரம்
கொடுமனந் தகைத்துவிடும் ஆத்மசக்கரம்
பகைகளைக் கடிந்துவிடும் ஆத்மசக்கரம்
பங்கமெலாம் போக்கிவிடும் ஆத்மசக்கரம்
எதிரிகளைத் தாக்கிவிடும் ஆத்மசக்கரம்
ஏற்றம் எமக்களிக்கும் ஆத்மசக்கரம்
எம்மையுயி ராய்க்காட்டும் ஆத்மசக்கரம்

எழிலுறு செயல்கள் தரும் ஆத்மசக்கரம்
சித்திகளைத் தந்தருளும் ஆத்மசக்கரம்
சீருயர் நல் வாழ்வு தரும் ஆத்மசக்கரம்
உண்ணின் றொலிக்குமிந்த ஆத்மசக்கரம்
உத்தம குணங்கள் தரும் ஆத்மசக்கரம்
பண்ணிறைந்த பாக்கள் தரும் ஆத்மசக்கரம்
பரவுணர்வைத் தூண்டிவிடும் ஆத்மசக்கரம்
உள்ளுணர்வை யொளிரவைக்கும் ஆத்மசக்கரம்
ஊக்கியுயிர் காக்குமிந்த ஆத்மசக்கரம்
நல்லுணர்வில் ஊற்றெடுக்கும் ஆத்மசக்கரம்
நரகநிலை தேய்த்துவிடும் ஆத்மசக்கரம்
பாவங்கள் போக்கிவிடும் ஆத்மசக்கரம்
பதிபசு பாசம் விளக்கும் ஆத்மசக்கரம்
பத்தி சத்தி தந்தருளும் ஆத்மசக்கரம்
பரநிலையுங் கூடவைக்கும் ஆத்மசக்கரம்
முத்திக்கு வித்தாகும் ஆத்மசக்கரம்
மூலசத்தி தானாகும் ஆத்மசக்கரம்
வையத் துயிர்காக்கும் ஆத்மசக்கரம் — தெய்வ
வைப்பிற் குயர்த்திவிடும் ஆத்மசக்கரம்
ஆணவத்தின் வலிகெடுக்கும் ஆத்மசக்கரம்
அகப்பரப்பைச் சிவமாக்கும் ஆத்மசக்கரம்
நிருத்தமிட் டகத்தாடும் ஆத்மசக்கரம்
நித்தியானந் தம்பயக்கும் ஆத்மசக்கரம்!

ஆத்மசக்கரம் .................. ஆத்மசக்கரம்
ஆத்மசக்கரம் .................. ஆத்மசக்கரம்!

---

காடுஞ் செடிகளும் உன்கோயில் — கலை
யுள்ளமெல் லாமுஎன் கவின் கோயில்
நாடும் நகரமும் உன்கோயில் — நடு
நாயகி யாகவு றைபவளே

ஏடும் எழுத்தும் திருக்கோயில் — அதன்
உள்ளுறை ஞானப்பெருங்கோயில்
(ஏடும் எழுத்தும் திருக்கோயில் ) — எழில்
( கொஞ்சும் மலர்களும் உன்கோயில் )
கூடும் அடியவ ருள்ளமெல்லாங் — குடி
கொண்டருள் ஆட்ட மிடுந்தாயே!

ஆடிடும் ஆட்டங்கள் ஆயிரமாம் — அருள்
ஆடுங் கரங்களும் ஆயிரமாம்
தேடிடும் இன்னுயிர்க் கூட்டங்களோ — இங்கு
தேர்ந்திடி லாயிரம் ஆயிரமாம்!

பாடிடும் பத்தர்கள் ஆயிரமாம் — பத்திப்
பாடல்கள் ஆயிர மாயிரமாம்
கூடிடுங் கோயில்கள் ஆயிரமாம் — அருள்
கூட்டிடு மூர்த்தங்கள் ஆயிரமாம்

சூடிடும் பூக்களும் ஆயிரமாம் — மலர்
சூட்டுங் கரங்களும் ஆயிரமாம்
நாடிடும் ஆர்வலர் ஆயிரமாம் — உன்னை
நாளுந் துதிப்பவர் ஆயிரமாம்

வாடும் மலர்களும் ஆயிரமாம் — விதி
வாட்டும் மனிதரும் ஆயிரமாம்
ஆக்கும் செயல்களும் ஆயிரமாம் — உன்னை
அண்டும் அனாதைகள் ஆயிரமாம்!

காக்குங் கரங்களும் ஆயிரமாம் — உன்
கருணை விழிகளும் ஆயிரமாம்
ஆக்குஞ் செயல்களும் ஆயிரமாம் — உன்
அழிக்குஞ் செயல்களும் ஆயிரமாம்!

பூக்குஞ் செயல்களும் ஆயிரமாம் — உன்
புகழ்ச் செயல் ஆயிரம் ஆயிரமாம்
போக்கும் வரவும் புணர்வு மில்லாத — நின்
பொற்புறு மாட்டம்பல் லாயிரமாம்!

## வேறு

தேடும் அடியவ ரெம்பிடையே — நறுந்
தென்றலாய் வீசிச்சு கந்தருவாய்
காடும் ககனம் புனலும் கனலும் — வெங்
காலும் நிலமுங் கரந்து நின்பூச்
சூடுந் திருவடி கள்ஆடி — அருட்
சோதிவடிவு நீ யாகி வந்தே
நாடும் எமதகத் தேயுறைந்தே — யருள்
நல்கிய கவிளக் காகிடுவாய்

ஆடிடும் ஆட்டங்கள் ஆயிரமாம் — அருள்
ஆடுங் கரங்களும் ஆயிரமாம்.

## வேறு

அன்ன நடையுடை யாரணங் கேதுயர்
அண்டிடா தெங்களை யாதரிப்பாய்
மன்னருந் தேவரும் வந்து வணங்கிடு
மாட்சிகண் டின்புறு மாத்தாளே
சொன்ன முறையினிற் பூசைகள் செய்பவர்
சோதியா யுந்தனைக் காண்டிடவே
வன்ன வரிப்புலி மீதேறி யெம்முன்
வந்து தரிசனந் தந்திடுவாய்!

பத்திகொண் டுன்னருட் கோயிலை வந்தடை
பத்தர் பவத்துயர் போக்கிடவே
இத்தரை மீதினில் நின்றாடி யெங்கள்
இல்லங்க டோறுமி ருந்தாடி
எத்துயர் வந்தெமை யாட்டிடி னுங்கொடும்
இன்னல்கள் வந்துத கித்திடினும்
சத்திய மாகவந் தெங்களைத் தாங்குமின்
சங்கரி யாமுன் னடைக் கலமே!

எண்ணிரு கோணமும் பாய்ந்தா டியுல
கெங்கணுஞ் சென்றுகு தித்தாடிப்
பண்ணொடு பாதம்ப தித்தாடி யுந்தன்
பத்தர்கள் கண்கள்ப னித்திடவே
அண்டிடு பேய்கள் பிசாசுக ளைநிதம்
ஆட்டிய லைக்குமி டர்களையும்
கண்டவி டத்திற் கடிந்தப யக்கரங்
காட்டியே யெங்களைக் காத்திடம்மா!

கருணை விழிக ளருள்பொழி யத்திருக்
காதுகள் எனக்கு ரல்கேட்க
இருளைக் கிழிக்கு மொளித்திரி சூலமெம்
இன்னல்கள் போக்கியே மின்னிநிற்பப்
பெருகு பிணிகளுந் பேய்ச்சிரிப் புக்கண்டு
பேசா தகவப் பெயர்ந் தாடி
அருளுந் திருவுமெ மக்களித் துன்பதம்
ஆடியே வந்தரு ளாடுமம்மா!

வேறு

அருளிடை யருளாய்ப் பொருளிடை பொருளாய்
அடியருக் கபயம ளிப்பவளே
தெருளிடைத் தெருளாய்த் திருவருட் டௌிவாய்
தேருமு ளத்திற் றெரிபவளே
அருமறைப் பொருளாய்த் திருவுருப் பொலிவாய்
அறிஞரு ணிற்கும் அறப்பொருளே
இருநில முயரப் பொருட்டரு திருவாய்
இகபர சுகமரு ளின்னமுதே!

உறவிடை யுறவாய் உயிரிடை யுயிராய்
உறைந்துல காளுமொ ருத்தமியே
அறிவினுக் கறிவாய் அமைதியின் விளைவாய்
அகத்தொளிர் ஞானமு தற்பொருளே
அறவினைப் பயனாய் மறவினைக் கரமாய்
அருட்பெரும் போதப தத்தினளாய்
விறலருள் தெய்வத் திறலருள் தேவி
விழுப்பொருள் கூட்டுமு ழுப்பொருளே!

மதிதரும் ஒளியாய் மனிதரின் நிதியாய்
பனதினை யாற்றும ருந்தானாய்
கதியென வுனையே துதியடி யவரின்
கடுவினை யோட்டுக ரத்தவளே
பதியென வொருவர் பசுவென வொருவர்
பகரத் துவிதப் பொருளானாய்
முதிரரு ளறிவின் முடிவிடை யொளியாய்
முதியவ ரறிவிற் றெரிபவளே!

## சத்தி

| | | |
|---|---|---|
| மின்னுமெழிற் | சுந்தரியே | வா வா வா |
| மிகு சுகங்கள் | தந்தருள | வா வா வா |
| பன்னிப் பன்னிப் | பாடுகிறோம் | வா வா வா |
| பகலிரவாய்க் | கூவுகிறோம் | வா வா வா |
| இன்னமுதே | யீஸ்வரியே | வா வா வா |
| ஏகபோக | ஞானசத்தி | வா வா வா |
| மன்னுமுயிர் | கள்துணையே | வா வா வா |
| மருள்போக்கி | யருள்தெளிக்க | வா வா வா |
| கண்ணிற் | கருமணியே | வா வா வா |
| கற்பகமே | நற்சுகமே | வா வா வா |
| விண்ணினர்க்கு | மரியவளே | வா வா வா |
| வீரதீர | வித்தகியே | வா வா வா |
| மண்ணினர்க்கு | மாமருந்தே | வா வா வா |
| மறைபொருளா | யுறைபவளே | வா வா வா |
| எண்ணுதற் | கினியவளே | வா வா வா |
| எங்களருட் | துணையே நீ | வா வா வா |
| பத்திகொண் | டுனைப்பணிவோம் | வா வா வா |
| பரலோக | நாயகியே | வா வா வா |
| எத்திசையும் | நீயானாய் | வா வா வா |
| எல்லோரும் | போற்றிசெய | வா வா வா |
| சித்திகள் | தருபவளே | வா வா வா |
| சிரித்து வினை | போக்கிடவே | வா வா வா |
| முத்திவழி | காட்டிட நீ | வா வா வா |
| மூலப்பரா | சத்தியரே | வா வா வா |

### வேறு

கலைகள்தருங் காரிகையே வாருமம்மா — நல்ல
கதியெமக்குக் காட்டிடவே வாருமம்மா
மலைமகளே யலைமகளே வாருமம்மா — எங்கள்
மனவிளக்காய் நின்றொளிர வாருமம்மா
சிலையினுயிர் கொண்டவளே வாருமம்மா — எங்கள்
சிங்கார நாச்சியரே வாருமம்மா
தொலைவிலிருந் தெமைக்காக்க வாருமம்மா — உன்னைத்
தோத்தரித்தோம் துயர்தீர்க்க வாருமம்மா

வேறு

ஆதிபரா சத்தியரே எங்கள் தாயே — எம்மை
ஆண்டருளும் அன்னையரே எங்கள் தாயே
சோதிவடி வாயிலங்கும் எங்கள் தாயே — எம்மைச்
சோதியா தருள்சொரிவாய் எங்கள் தாயே
பாதிபர னாகிநிற்கும் எங்கள் தாயே — பரி
பூரணியே யாரணியே எங்கள் தாயே
நீதிநிலை பெறவருள்வாய் எங்கள் தாயே — எமக்கு
நிறைசுகங்கள் தந்திடுவாய் எங்கள் தாயே
ஓதியுணர் தற்கரியோய் எங்கள் தாயே — பெரும்
ஓங்கார சத்தியரே எங்கள் தாயே
ஆதிசத்தி யம்பிகையே எங்கள் தாயே
ஆங்கார சத்தியரே எங்கள் தாயே
திங்கள்கங்கைச் சடையாரே எங்கள் தாயே
திரிசூல நாயகியே எங்கள் தாயே
சிங்கத்தி லேறிவந்தே எங்கள் தாயே
சித்திகளைத் தந்தருள்வாய் எங்கள் தாயே
சங்கொலிகேட் டார்ப்பரிப்பாய் எங்கள் தாயே
சரணம் சரணமம்மா எங்கள் தாயே
கருநிறத்துக் காரிகையே எங்கள் தாயே
கமலபாத சுந்தரியே எங்கள் தாயே
பொருதுவினை சாடிடுவாய் எங்கள் தாயே
போதபதந் தந்தருள்வாய் எங்கள் தாயே!

❋ ❋ ❋ ❋

இராகம்: செஞ்சுருட்டி தாளம்: ஏகம்

"தத்துவத்தில் நீ பெரிய ஓங்காரி — உந்தன்
தனித்துவத்தில் நீ பெரிய ஆங்காரி"

நானுன்மேல் பொழிந்திடுவேன் பூமாரி
நமக்கருள வேண்டுகிறேன் பாமாரி — அம்மா
தத்......

பயிர்களுக்கு வேண்டுமுந்தன் வான்மாரி — இந்த
உயிர்களுக்கு வேண்டுமின்பத் தேன்மாரி — அம்மா
தத்......

உன் ஆட்டத்துக்குப் போட்டிடுவார் சல்லாரி
என் பாட்டிதற்கு வேண்டுகிறேன் சொல்மாரி — அம்மா
தத்......

நல்லணிகள் பூண்பதில் நீ யலங்காரி
நாட்டியரச த்தினில் நீ சிருங்காரி — அம்மா
தத்துவத்...

அழகுநடை பயில்வதில் நீ சிங்காரி
அடுபகைகள் கெடுப்பதில் நீ சங்காரி — அம்மா
தத்துவத் ...

அமைதியிலே நீ பெரிதும் ஆழ்வாரி
ஆர்ப்பரித்தா டுவதினில் நீ அலைவாரி — அம்மா
தத்துவத்...

நாமுயரத் தாருமம்மா பொருள்மாரி — எங்கள்
'நான்' ஒழியத் தாருமம்மா அருள்மாரி — அம்மா
தத்துவத் ...

பார்க்கையில் நீ யாயிரங் கண்மாரி
பண்ணிசை த ருவதில்நீ பண்மாரி
தண்ணொளி த ருவதில் நீ தண்மாரி — எம்மைத்
தாங்கியருள் சொரியுமம்மா விண்மாரி — அம்மா
தத்துவத்...

கண்துஞ்சா துயிர்காக்குங் கருமாரி
கருணைமழை பொழிவதில் நீ பெருமாரி
அடியர்களைக் காப்பதில் நீ அரண்மாரி
அடியரியா முனதடியிற் சரண்மாரி! — அம்மா
தத்துவத் ...

அரியாகி அயனாகி யரனாகினாய்
அழகாகிப் பழமாகி யதுவாகினாய்
பரிமாணப் பொருளாகிப் பரனாகினாய்
பதியாகி மதியாகி விதியாகினாய்
சரியாகிப் பிழையாகிச் சமனாகினாய்
சரவசர வுயிராகிப் பெரிதாகினாய்
எரியாகிப் புரியாத விரிவாகினாய்
எருதேறி வருமீசு வரியாகினாய் — அம்மா
தத்துவத் ...

வானாகி நிலனாகி யொளியாகினாய்
வளியாகி யனலாகிப் புனலாகினாய்
ஊனாகி யுயிராகி யுறவாகினாய்
உளவாகி யிலவாகித் திருவாகினாய்
கோனாகி மனனாகிக் குணனாகினாய்
குருவாகி யருளான நிலையாகினாய்
நானாகி யரிதான விறையாகினாய்
நடுவாக வருமீசு வரியாகினாய் — அம்மா

தத்துவத்தில் நீபெரிய ஓங்காரி — உந்தன்
தனித்துவத்தில் நீபெரிய ஆங்காரி!

மன்பதைக்கு யானென்றும் உதவ வேண்டும்
மரணபயம் போக்கவுனை வணங்க வேண்டும்
இன்பமதை யிறைமையிலே காண வேண்டும்
ஈஸ்வரனை முழுமனத்தால் நாடவேண்டும்
உண்மையினை நாடியுளந் தேட வேண்டும்
உருக்கமுள நெஞ்சினையாம் ஆக்க வேண்டும்
பண்புமிளிர் வார்த்தைகளைப் பேச வேண்டும்
பரனுருவை நெஞ்சினிலே தேக்க வேண்டும்!

மற்றையவர் துயர்தீர்த்து வாழ வேண்டும்
மாதினரைத் தாயாய்நாம் மதிக்க வேண்டும்
சொற்சுவைசேர் பாக்களையாம் பாடவேண்டும்
சோர்வகற்றிச் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டும்
கற்றவற்றின் கருத்தொன்றி வாழ வேண்டும்
காமக்குரோ தங்களையாம் இரித்தல் வேண்டும்
உற்றதுணை யன்னையென வுணர்ந்துன் நற்றாள்
உள்ளளவும் நினைந்துநினைந் துருக வேண்டும்!

உண்ணுமுண வினையாமிட் டுண்ண வேண்டும்
ஊதியத்தை யுழைத்துழைத்தே தேட வேண்டும்
கண்ணியத்தைக் கடைப்பிடித்தே யொழுக வேண்டும்
கருத்திலிறை பக்தியினைப் பூண வேண்டும்
அண்ணன்தம்பி தங்கையரைப் பேண வேண்டும்
அன்புநிறை நல்லவரைக் காண வேண்டும்
தண்மையுள அன்னையிவை யீந்து விட்டால்
தரணியிலே யாமெதற்கோ அஞ்ச வேண்டும்! — அம்மா!

தத்துவத்தில் நீபெரிய ஓங்காரி — உந்தன்
தனித்துவத்தில் நீபெரிய ஆங்காரி!

❋ ❋ ❋

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

எண்ண எண்ண இனிக்குமின்பப் பழமே — உன்னை
எண்ணிவிட என் மனத்தா லாகா
வண்ண வண்ணப் பூங்கொத்து மலரே — உன்னை
வருணிக்க வாயொன்று போதா.

பண்ணிறைந்த பாக்களினாற் கூட — உன்னைப்
பாடிவிட என்பதங்கள் போதா
மண்ணிறைந்த பத்தர்களாற் கூட — உன்னை
வழிபடற் ககத்திலிடம் போதா.

எண்ண எண்ண ...

விண்ணிறைந்த தேவர்களுங் காணா — வேத
விழுப்பொருளை எங்களினால் தேடக்
கண்ணிருந்துங் கால்களினால் ஆகா — உள்ளக்
கருத்திருந்து முட்பரப்பி லடங்கா.

எண்ண எண்ண ...

கண்களினால் உந்தனையாங் காண — எங்கள்
கண்ணிரண்டும் போதவில்லைத் தாயே
எண்களினால் உன்னெழிலைப் போட — எங்கள்
எண்கணக்குப் போதவில்லைத் தாயே.

எண்ண எண்ண ...

அம்மஅம்ம என்னசொல்லிக் கூவ — உந்தன்
அழகினையா னென்னவென்று கூற
இப்மட்டோ அம்மட்டோ பெருமை — அடக்க
என்னிதயத் திடம்போது மாமோ.

எண்ண எண்ண ...

என்னஎன்ன வண்ணமிவை ஆகா — இவை
என்மனத்தால் மறந்துவிடப் போகா
இன்னஇன்ன என்றிவையை நாமோ — இங்கு
இசைத்திசைத்துப் பாடிவிடப் போமோ!

எண்ண எண்ண ...

நுண்மையிலும் நுண்மையதா முன்னை — எங்கள்
நூலறிவாற் கண்டுவிடல் ஆமோ
கண்களினால் காண்பரிய வுன்னை — ஞானக்
கண்கொண்டு காணவருள் வாயே.

எண்ணஎண்ண இனிக்கு மின்பப்பழமே — உன்னை
எண்ணிவிட என்மனத்தா லாகா!

இராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பாடாத நாளில்லைத் தாயே — புகழ்
பரவாத நாவும் எனக்கில்லை யம்மா!
உன்னைப் ... ...

பாடாத நாளில்லைத் தாயே

உலகப் பெருஞ்சுழற் பட்டே — உன்னை
ஊன்றியே நோக்கா துழன்றுகெட் டேனே
கலகப் பெரும்புயல் விட்டே — உன்னைக்
காதலித் தேத்திக் கடைத்தேற வையே
உன்னைப் பாடாத .....

மண்ணினரு ளடியேத்து வாரே — மாய
வழியை மறைத்தருள் மழைபெய்கு வாயே
கண்ணெனும் அறிவருள் வாயே — ஞானக்
கண்டுகொண் டுனைக்கண் டிருக்கவைப் பாயே.
உன்னைப்பாடாத ... ...

விண்ணாண மும்வீம்பும் விட்டே — உந்தன்
விரைகழல்போற்றிப் பணியவைப் பாயே
எண்ணாது னைநினைந் தேத்தும் — படியி
லேறியே றியுனைக் காணவைப்பாயே
உன்னைப் பாடாத......

வீறான போக்கையான் விட்டே — நல்ல
வேதங்க ளோதும் நெறிப்போந்துநின்றே
ஏறாத படிகளைத் தாண்டி — இங்கே
ஏற்றமுற் றுன்பதத் துறையவைப் பாயே.
உன்னைப் பாடாத......

பிறவிப் பெருங்கடல் நீந்தும் — நல்ல
பேறெனக் கிப்பிறப் பினிலருள் வாயே
மறலிப் பெரும்பயம் விட்டே என்னை
மறந்துயா னுன்னருள் மாந்தவைப் பாயே.
உன்னைப் பாடாத......

நாயினேற் கருள்நல்கு வாயே — எந்தன்
'நான்' இறந் தானுனைக் காண்டலும் ஆமே
சேயினேன் இருள்நீங்கல் ஆமே — செகச்
சேற்றைவிட் டுன்திருத் தாளண்டி னாலே.
உன்னைப் பாடாத......

நானெனதென் பதனை மறந்தே — எந்த
நாளுநா னுந்தனை நினைப்பற நினைந்தே
தேனெனுமுன் னின்பம் பெறற்கே — தித்திப்
பானநல் லனுபூதி யினைநல்கு வாயே.
உன்னைப் பாடாத......

பத்திமை பூண்டுன்னைப் பாடி — நெஞ்சப்
பாறையை யுருக்கிப் பணியவைப் பாயே
நித்திய சுகந்தரலா காதோ — நெஞ்சம்
நிறையின்ப சாகரத் துறையவைப் பாயே!
உன்னைப் பாடாத......

அனைத்துலக போகங்க ளெல்லாம் — எம்மை
ஆற்றுப் படுத்தவிங் கேற்புடைத் தாமோ
எனை மாய்க்கு மாணவந் தேய்த்தே — என்னை
ஏற்றியே யுன்னடிப் போதிலேற் பாயே!
உன்னைப் ......

பாடாத நாளில்லைத் தாயே — புகழ்
பரவாத நாவும் எனக்கில்லை யம்மா.

இராகம்: கெம்பீரநாட்டை தாளம்: ரூபகம்

"அம்மா நீ எனக்கு அரண்
அடியேனுன் னடியிற் சரண்''

உன் புகழ்பாட நா மணக்கும் — உன்
வருகையிலே பூ மணக்கும்
உன் கொண்டையிலே தேன் மணக்கும் — உன்
புன்னகையிற் சுகம் மணக்கும்!

அம்மா நீ ——

உன் ஆட்டத்தில் அருள் மலரும் — உன்
அருளினிலே நாம் மலர்வோம்
உன் பார்வையிலே கனிவு திரும் — உன்
உறவதுவும் நனியினிக்கும்!

அம்மா நீ ——

உன் னெழில்முகங்கா வியம்படைக்கும் — எம்
ஏக்கமெல்லாம் நீ துடைப்பாய்
உன் சிலம்பிரண்டுந் தாமொலிக்கும் — எம்
இலம்பையெலாம் நீயொழிப்பாய்

அம்மா நீ ——

உன் வர்ணஜால கோலத்திலே — எம்
வருத்தமெலாம் போய்வடியும்
உன் கருமைநிற வடிவினிலே — எம்
கலக்கங்கள் தாம் மடியும்

அம்மா நீ.....

உன் காலிற்சி லம்பொலியும் — உன்
கதகதக்கும் மெய்ப்பொலிவும்
வெண் பாலிற்ப ழம்நழுவி — இதமாய்ப்
படிவதுபோற் றோன்றுதம்மா.

அம்மா நீ....

உன் எழிலைக் காணக்காண — என்
உள்ளமெலாம் உருகும் அதில்
மின்னு மருள் அலையினிலே — யானும்
மிதக்கமனம் தூண்டுதம்மா!

அம்மா நீ....

உன் திரிசூலந் தோன்றிடிலோ — எம்
தீமையெலாந் தாமொடியும்
ஒரு கண்ணிமைக்கும் நொடியினிலே — எம்
கடுவினைகள் தாம் மடியும்!

அம்மா நீ....

எம் கள்ளக்கு ரம்பைகளின் — வன்
கட்டெல்லாந் தாமழியும்
எம் முள்ளக்கோ யில்களில் நீ — வந்
துறைந் தெம்மு ளையொழிப்பாய்

அம்மா நீ....

எம் உள்ளத்தெ ளிவினிலே — ஓர்
ஒளிவிளக்காய் வந்திடுவாய்
எம் கள்ளமிலா வகக் கடலில் — அக்
கரைகாட்டி வந்திடுவாய்

அம்மா நீ....

எம் வாழ்வினுயிர் ஓவியம் நீ — எம்
எழிலார்ந்த காவியம் நீ
எம் வாழ்வினுயிர் நாடியும் நீ — இங்கு
நனியினிக்குந் தேவியும் நீ

அம்மா நீ....

பண்ணிறைந்த பாக்களெல்லாம் — உன்
பரபதத்தின் பூக்களம்மா
எண்ணிகந்தான் மாக்களெல்லாம் — உன்
எழில்நடனத் தேக்கமம்மா

அம்மா நீ ...

கண்ணிறைந்த கற்பகமே — எம்
காரிருளில் மின்னொளியே
விண்ணிறைந்த விற்பனமே — உன்
விழியொளியைக் காட்டுமம்மா

அம்மாநீ எனக்கு அரண்
அடியேனுன்னடியிற் சரண்!

இராகம்: நாட்டை தாளம்: கண்டசாபு

வேதனைகள் தீர்த்திடுவாய் தாயே — எந்தன்
வெவ்வினையின் வேரறுப்பா யம்மா!

நோய்நொடிகள் தீரவிலைத்ல் தாயே — எந்தன்
நொய்தவுடல் தேறவில்லை யம்மா
பாய்மேல் படுத்திடினுந் தாயே — உன்மேல்
பாசமுள்ள மகவெனைத்தாங் காயோ

வேதனைகள் ...

காய்கனிகள் தின்றவுடல் தாயே — இது
காலமென்னை வளர்த்தகாய மம்மா
நோய்நொடியாற் றளர்ந்துவிடில் தாயே — எந்தன்
நீண்டவினை தீர்ந்திடலெவ் வாறோ

வேதனைகள் ...

வந்தவுயிர் தன்கருமந் தீர்க்க — எமக்கு
வலியவுடல் வேண்டாவோ தாயே
நொந்தவுடல் நோய்நொடிகள் மாற்றி — உன்னை
நோன்பிருந்து தேடவருள் வாயே

வேதனைகள் ...

வெள்ளையுள்ளப் பீடத்திலே யென்றும் — நீயே
வீற்றிருந் தருமருந்தே யாவாய்
நள்ளிரவுப் பொட்டிலுமுன் புகழை — நின்று
நாவாரப் பாடுமென்னைக் காவாய்.

வேதனைகள் ...

பாரிற்பொருள் பண்டமெல்லாம் எனக்கே — பெருப்
பாரமா யிருக்குதம்மா கேண்மோ
பஞ்சம் பசிகளெல்லாம் தாயே — உந்தன்
பரலீலை யென்றுணர்ந்தேன் அம்மா!
வேதனைகள்......

வையகச் சுகங்களெல்லாந் தாயே — உந்தன்
வான்சுகத்துக் கீடாகு மாமோ
மெய்ச்சுக முன்பெறதுவே தாயே — இனி
மேலிவனுன் சரணமலர்ச் சரணே!
வேதனைகள்......

மனித்தப் பிறவியிலே தாயே — உந்தன்
மாணடிகள் சதமெனயான் கண்டேன்
தனித்துத் தவமிருந்தேன் தாயே — உந்தன்
தாளிணையைக் காட்டியருள் வாயே!
வேதனைகள்......

நித்தியசு கம்பெறவே வேண்டி — இந்த
நீணிலத்தில் தொண்டுசெய்தேன் தாயே!
வித்தைகளைத் தந்ததினைப் போலே — அக
விழைவினையும் நிறைவுறச்செய் வாயே!

வேதனைகள் தீர்த்திடுவாய் தாயே — எந்தன்
வெவ்வினையின் வேரறுப்பாய் அம்மா!



## காளிகாதேவி

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: திஸ்ரம்

அம்மா தாயே காளியரே — எமக்
காறுதல் தந்திடும் அம்பிகையே!

அண்ட வெளியெல்லாம உன்மேனி — பெரும்
ஆகாயக் கோளங்கள் உன்மேனி
துண்டப் பிறையதும் உன்முடி யில்முட்டித்
தூயொளி பெற்றுத் துலங்குதம்மா

நீலக்க டல்அலை வீசுகையில் — உந்தன்
நீள்கரங் கள்அசைதல் தோன்றும் — கொடுங்
கோலத் தனதுமெய்க் கோலமுந் தோன்றியே
கொல்லுங் குணக்குறி யாடுதம்மா!

திமைக்குத் தண்டனை தந்திடவே — ரத்தம்
தோய்ந்திடு வாளையுங் காட்டுகிறாய் — விசைக்
காற்றிற் கடுகியே வந்திவ ணெம்மனக்
காட்சியிற் பன்முறை தோன்றுகிறாய்!

ஊனக்கண் கொண்டுனைக் கண்டிட வெங்களுக்
குள்ள வுறுதியு மில்லையம்மா
எங்கும் பயங்கரம் எங்கும் பதைப்புகள்
என்னவுன் கோரசொ ரூபமம்மா

எங்கும் அழுகுரல் எங்குந் துயரங்கள்
எங்கணுங் கோரச் செயல்களந்தோ
அக்கினிக் குண்டங்கள் போன்றவுன் கண்களெம்
மாணவத் தைஎரி யூட்டுதம்மா!

மன்பதை காக்குமா காளியரே — ஜெய
மாதே பரசிவ தேவியரே
உன்னருட் கோலத்தைக் கண்டு வணங்கிட
உள்ளத்தில் வீரமுந் தந்திடம்மா

பத்திமை பூண்டுன்னை யேத்தி டுவாரைப்
பரிவுடன் காத்தருள் அம்பிகையே
சுத்தசத் திவீர சுந்தரி சங்கரி
தோத்தரித் தோமெமைக் காத்தருளே!

அம்மா தாயே காளியரே — எமக்
காறுதல் தந்திடும் அம்பிகையே

✻ ✻ ✻ ✻

கோரமுகம் மாற்றியிவண் குளிர்நயனங் கள்சிமிட்டிக்
கொற்றவை பரிமளிப்போ டசைந்துவாறார் — நாங்கள்
கோரும் வரமளிக்க ஓடிவாறார்

காலிற்பொற் சிலம்பொலிக்கக் கங்கண மசைந்துவரக்
காளிய ரெமைத்தேடி யாடிவாறார் — எம்மைக்
காணப்ப தைபதைத்தே யோடிவாறார்

மங்களப்புன் னகைதவழ மார்பசைந் தசைந்துவர
மாணடி யெடுத்தாடி யசைந்துவாறார் — மலர்
மாலைகளு மாடமகிழ்ந் தோடிவாறார்

தங்கமின் சிலம்பொலிக்கத் தாரின்மணந் தான்பரப்பி
யங்கை யசைத்தசைத்தே யாடிவாறார் — எம்மைத்
தாங்கிச்சுக வாழ்வளிக்க ஓடிவாறார்

அங்கம்புள கித்தார்வம் பொங்கமகிழ் வெய்திஒயமக்
காறுதல ளிக்கவிவ ரசைந்துவாறார் — எம்மை
அரவணைக்க ஆடியசைந் தோடிவாறார்

கண்கள் பளபளக்கக் கண்ணிமை யசைத்தசைத்துக்
கார்மேகம் போலவிவ ரசைந்துவாறார் — எம்மைக்
காதலொடுங் காத்தருளற் கோடிவாறார்

புற்றரையிற் கால்பதித்துப் பூவென வசைந்தசைந்து
புத்தொளி பரப்பியன்னை யாடிவாறார் — எம்மைப்
புரந்தருள் சொரிந்துவிட வோடிவாறார்

மந்திரப் பிரம்புமலர்க் கையினிலே தாங்கியிவர்
மக்கள் துயர்துடைக்க ஓடிவாறார் — எங்கள்
மனமகிழ்ச்சி யெய்திடவே யாடிவாறார்

பகைகள் பசாசுகளைப் பாரிலுள்ள நீசர்களைப்
படுசூர ணஞ்செய்ய ஓடிவாறார் — எங்கள்
பயந்தீர்த் திரட்சிக்க ஆடிவாறார்

வேப்பிலை கரத்தெடுத்து வெப்புநோய் குணப்படுத்தி
வேதனைகள் தீர்த்தவண்ண மாடிவாறார் — எங்கள்
வெந்துயர்கள் வெட்டவிரைந் தோடிவாறார்

திரிசூலங் கைப்பிடித்துத் திக்கெட்டுந் (தாரீன்றிந்து)
தீமைகளைப் போக்கவில ரோடிவாறார் — எமக்குத்
திருவடிக ளைக்காட்டி யாடிவா றார்

பூக்கள் சொரிந்திடுவோம் பொங்கல்மடை வைத்திடுவோம்
பூவடிக ளைப்போற்றிப் பாடிடுவோம்நாம் — அம்மா
புதுவாழ் வெமக்கருள்வை காளித்தாயே! — அம்மா
புதுவாழ் வெமக்கருள்வை காளித்தாயே!

## மங்களம்

ஸ்ரீகாளி யம்மையர்க்கு ஜய மங்களம் — நல்ல
செய்யமுக சுந்தரிக்குச் சுப மங்களம்

மாதாப ராபரைக்கு மன்னுமபி ராமியர்க்கு
சீரேறு தேவியர்க்கு திவ்யபர மேஸ்வரிக்கு
ஸ்ரீகாளி ......

தங்குதிரி யம்பகிக்கு சங்கரிக்கு மங்களம்
தாபரித யாளினிக்கு தாரணிக்கு மங்களம்
சர்வலோக நாயகிக்கு சாயுச்சிய தாளினர்க்கு
சத்யஜெய மாலினிக்கு சாம்பவி யோகிஸ்வரிக்கு
ஸ்ரீகாளி ......

அகிலாண்ட கோடியீன்ற ஆதியர்க்கு மங்களம்
அகண்டபரி பூரணிக்கு அம்பிகைக்கு மங்களம்
துரிய மந்தாகினிக்கு தகுசிம்ம வாஹினிக்கு
வீர்ய விலாசினிக்கு விநோதமா காளியர்க்கு
ஸ்ரீகாளி ......

## முத்துமாரியம்மன்

முத்துமாரி முத்துமாரி
முத்துமாரி தாயே முத்துமாரி

ஆயிரங்கண் ணுடையவளே முத்துமாரி — எம்மை
ஆண்டருள வேண்டுமம்மா முத்துமாரி
சேயினரைப் பார்த்திரங்காய் முத்துமாரி — உந்தன்
செங்கரத்தா லெமையணைப்பாய் முத்துமாரி
தண்மையுள்ள தாயாரே முத்துமாரி — எமையுன்
தளிர்க்கரத்தா லேந்திடுவாய் முத்துமாரி
வண்மையுள்ள தாயாரே முத்துமாரி — எமக்கு
வரமளிக்க வேண்டுமம்மா முத்துமாரி முத்துமாரி —

வேப்பிலையில் தங்கிடுவாய் முத்துமாரி — எங்கள்
வெவ்வினைக டிந்திடுவாய் முத்துமாரி
கூப்பிடுவோம் வந்திடுவாய் முத்துமாரி — எங்கள்
குரல்கேட்டி ரங்கிடுவாய் முத்துமாரி
பூக்கள் சொரிந்திடுவோம் முத்துமாரி — ஒரு
புன்சிரிப்பு திர்த்திடுவாய் முத்துமாரி
பாக்கள் பண்ணொடு மிசைப்போம் முத்துமாரி — எம்மேல்
பரிவுகொண் டருள்சொரிவாய் முத்துமாரி —

கொட்டும் மழையிலும் நீ முத்துமாரி — எம்முன்
குதித்தோடி வந்திடுவாய் முத்துமாரி
நட்டநிசி வேளையிலே முத்துமாரி — வந்தெம்
நடுக்கங்கள் தீர்த்திடுவாய் முத்துமாரி
பட்டப்ப கலிலும் நீ முத்துமாரி — வந்தெம்
பழவினைகள் போக்கிடுவாய் முத்துமாரி
இட்டமுடன் வந்திடுவாய் முத்துமாரி — வந்தெம்
இழவூழ் கடிந்திடுவாய் முத்துமாரி முத்துமாரி —

கர்ப்பூர தீபத்திலே முத்துமாரி — வந்தெங்
கடுவினை கடிந்திடுவாய் முத்துமாரி
சந்தன நறுமணத்தில் முத்துமாரி — தாயே
சஞ்சரித்தின் பந்தருவாய் முத்துமாரி
குங்குமத்தின் மங்களத்தில் முத்துமாரி — வந்து
குதிகுதித்தே யாடிடுவாய் முத்துமாரி
சாம்பிராணிப் புகையினிலே முத்துமாரி — வந்துன்
சௌந்தரரூ பங்காட்டாய் முத்துமாரி
முத்துமாரி —

பேய் பிணிகள் போக்கிடவே முத்துமாரி — கொடிய
பேய்ச்சிரிப்போ டாடிடுவாய் முத்துமாரி
ஊழ்வினை கடிந்திடவே முத்துமாரி — அம்மா
உந்தியுந்தி யாடிடுவாய் முத்துமாரி
விதியின்கொ டுமைகளை முத்துமாரி — நீயும்
வீரமுடன் தேய்த்திடுவாய் முத்துமாரி
போகாத் தொத்துகளையும் நீ முத்துமாரி — உன்றன்
பொற்பிரம்பா லோட்டிடுவாய் முத்துமாரி

கரகம் கரகமம்மா முத்துமாரி — எம்மைக்
கடுகிவந் தணைத்திடுவாய் முத்துமாரி
கரகங் கரகமம்மா முத்துமாரி — எம்மேல்
கருணைகொண்டிங் காடிடுவாய் முத்துமாரி
கரகங் கரகமம்மா முத்துமாரி — எங்கள்
கலக்கங்கள் தீர்த்திடுவாய் முத்துமாரி
அரவம் குடைபிடிக்க முத்துமாரி — வந்துன்
னடியருக் கருள்சொரிவாய் முத்துமாரி

சரணம் சரணமம்மா முத்துமாரி — நாங்கள்
சல்லாரி கொட்டிடுவோம் முத்துமாரி
சரணம் சரணமம்மா முத்துமாரி — நாங்கள்
சங்கொலி முழக்கிடுவோம் முத்துமாரி
அபயம் அபயமம்மா முத்துமாரி — எங்கள்
அபயக்குரல் கேட்டிடுவாய் முத்துமாரி
அங்கைகொண் டேயணைப்பாய் முத்துமாரி — நாமுன்
அபயம் அபயமம்மா முத்துமாரி

முத்துமாரி முத்துமாரி
முத்துமாரி தாயே முத்துமாரி!

## நாகபூஷணியம்மன்

நாக பூஷணி......... நாக பூஷணி
நாக பூஷணி ......... நயினை - நாகபூஷணி;

வந்து பாரம்மா தாயே வந்து பாரம்மா
வழியறியா திழியு மெம்மை வந்து பாரம்மா

சிந்து நடை கொண்டாடி நாகபூஷணி
தாயே நாகபூஷணி — நீயுஞ்
சினமடக்கிக் குணம் பெருக்காய் நாகபூஷணி

பண்ணிசைகள் கேட்டுவந்தே நாகபூஷணி
தாயே நாகபூஷணி — எமக்குப்
பரசுகங்கள் தந்திடுவாய் நாகபூஷணி

அமைதிப்பூம் பந்தரிலே நாகபூஷணி
அம்மா நாகபூஷணி — நன்றாய்
அமர்ந்தருளிக் காட்சிதாராய் நாகபூஷணி

கண்ணொளியை வீசியாடும் நாகபூஷணி
தாயே நாகபூஷணி — உந்தன்
தண்ணொளியெ மக்கருள்வாய் நாகபூஷணி

ஐந்தையும்நா மடக்கிடவே நாகபூஷணி
அம்மா நாகபூஷணி — நீயும்
ஐந்துதலை தாங்கிடுவாய் நாகபூஷணி

உந்திக்கம லத்தடியில் நாகபூஷணி
தாயே நாகபூஷணி — நீயும்
உறைந்தடங்கி யிருப்பவளே நாகபூஷணி

குண்டலியைக் கொண்டுயரும் நாகபூஷணி
தாயே நாகபூஷணி — நீயே
குதித்தெழுந்துச் சியிலமரும் நாகபூஷணி

புவனேஸ்வரி பீடத்திலே நாகபூஷணி
தாயே நாகபூஷணி — அமர்ந்து
புதுவாழ்வெ மக்கருள்வாய் நாகபூஷணி

குங்குமத்தால் பூசைசெய்தோம் நாகபூஷணி
அம்மா நாகபூஷணி — எங்கள்
குறைகுற்றம் போக்கிடுவாய் நாகபூஷணி

அமைதிதந்தே யாடுமம்மா நாகபூஷணி
அம்மா நாகபூஷணி ... உந்தன்
அருளுவந்தே யாடுமம்மா நாகபூஷணி

நாகபூஷணி ...... நாகபூஷணி
ஓம் நாகபூஷணி...... நயினை நாகபூஷணி

உச்சித்தில கத்தினிலே நாகபூஷணி
அம்மா நாகபூஷணி ... நீயும்
ஒளியாகித் தோன்றிடுவாய் நாகபூஷணி

விந்துவெளி யடைத்துவிட்டால் நாகபூஷணி
தாயே நாகபூஷணி — உச்சி
வெளியிலொளி காட்டிடுவாய் நாகபூஷணி

சித்அம்ப ரத்தினிலே நாகபூஷணி
தாயே நாகபூஷணி — துலங்கிச்
சித்துநடனம் புரிவாய் நாகபூஷணி

உச்சியில் நீ தாங்குவதோ நாகரத்தினம் — ஆங்கண்
உள்ளுறையும் ஒளிக்கீற்று நாகரத்தினம்

விண்டவெளிச் சுடரலவோ நாகரத்தினம் — உச்சி
வெளிச்சுடராய்த் தோன்றிடுமே நாகரத்தினம்

கண்கண்ட தெய்வம் நீயே நாகபூஷணி
அம்மா நாகபூஷணி — நீயே
கரைகாணா வின்பவாரி நாகபூஷணி

வேண்டும் இடங்களிலே நாகபூஷணி
அம்மா நாகபூஷணி — நீயும்
விதிவழியே தோன்றிடுவாய் நாகபூஷணி

மங்கையர்மண வாழ்வொளிர நாகபூஷணி
தாயே நாகபூஷணி — வந்து
மானசஸ்பரி சந்தருவாய் நாகபூஷணி

நாகதோஷம் போக்கிடவே நாகபூஷணி
அம்மா நாகபூஷணி — தோன்றி
நயனபார்வை செய்திடுவாய் நாகபூஷணி

மங்களங்கள் தாருமம்மா நாகபூஷணி
தேவி நாகபூஷணி — மண
மாலைகள்நாம் சாத்திடுவோம் நாகபூஷணி

குங்குமத்தால் பூசைசெய்வோம் நாகபூஷணி
அம்மா நாகபூஷணி — உந்தன்
குளிர்நயனங் காட்டிடுவாய் நாகபூஷணி!

நாகபூஷணி நாகபூஷணி
நாகபூஷணி நயினை நாகபூஷணி

## ஸ்ரீராம தோத்திரம்

ராம சக்கரம் ராம சக்கரம்
ராம சக்கரம் ஸ்ரீ ராம சக்கரம்!

ராம ராம ராம ராம ராம சக்கரம்
ராம ராம ராம ராம ராம சக்கரம்
ராம ராம ராம ராம ஸ்ரீ ராம சக்கரம்
ராம ராம ராம ராம ஸ்ரீ ராம சக்கரம்!

ராம ராம ஸ்ரீ ராம ஹரே ராம சக்கரம்
ராம ராம ஹரே கிருஷ்ண ஹரே ராம சக்கரம்
ராம ராம ராம ராம ஹரே ராம சக்கரம்
ராம ராம ஹரே ராம ஹரே ராம சக்கரம்!

ராம ராம ஹரே ராம மகாவிஷ்ணு சக்கரம்
ஹரே ராம ஸ்ரீராம மகாவிஷ்ணு சக்கரம்
ஹரே ராம ஜெயராம மகாவிஷ்ணு சக்கரம்
ராம ராம மங்களராம மகாவிஷ்ணு சக்கரம்!

ஹரே ராம ஹரேகிருஷ்ண கோவிந்தராம சக்கரம்
ஹரே ராம ஸ்ரீராம கோவிந்தராம சக்கரம்
ஹரே ராம கோகுலராம கோவிந்தராம சக்கரம்
ஹரே ராம கோவிந்தராம கோபாலராம சக்கரம்!

ராம சக்கரம் ஸ்ரீராம சக்கரம் ஜெயராம சக்கரம்
ராம சக்கரம் ஸ்ரீராம சக்கரம் சீதாராம சக்கரம்
ஹரே ராம சக்கரம் ஸ்ரீராம சக்கரம் மங்களராம சக்கரம்
ஜெய ராமசக்கரம் மங்களராமசக்கரம் மகாவிஷ்ணு சக்கரம்

ராம ராம ராம ராம ராம சக்கரம்
ராம ராம ராம ராம ஸ்ரீராம சக்கரம்
ராம சக்கரம் ஜெயராம சக்கரம் சீதாராம சக்கரம்
ராம ராம ராம ராம ஜெயராம சக்கரம்
ராம சக்கரம்... .. ஸ்ரீராம சக்கரம்
ராம ராம ராம ராம ஸ்ரீராம சக்கரம்!

ரங்கநாதா ... — ரங்கநாதா
ரங்கநாதா .... ஸ்ரீரங்கநாதா

பாம்பணையிற் பள்ளி கொள்ளும் ரங்கநாதா — எம்மைப்
பார்த்திரங்க வேண்டுமையா ரங்கநாதா

பாற்கடலில் பள்ளிகொள்ளும் ரங்கநாதா — ஆபத்
பாந்தவனே பாண்டுரங்கா ரங்கநாதா
ஆலிலையிற் பள்ளிகொள்ளும் ரங்கநாதா — எம்மை
அரவணைக்க வேண்டுமையா ரங்கநாதா
அலைகடலிற் பள்ளிகொள்ளும் ரங்கநாதா — எங்கள்
அகக்கடலிற் பள்ளிகொள்வாய் ரங்கநாதா
அயோத்திவாழ் ரகுராமா ரங்கநாதா — எம்மை
ஆண்டருள வந்தருள்வாய் ரங்கநாதா
காஞ்சியில் வரதராஜா ரங்கநாதா — எங்கள்
கலக்கமெல்லாம் தீர்த்திடுவாய் ரங்கநாதா
துவாரகை வாசா கிருஷ்ணா ரங்கநாதா — எங்கள்
துயரமெல்லாம் போக்கிடுவாய் ரங்கநாதா
திருக்குழியில் விஜயராகவ ரங்கநாதா — உந்தன்
திருவடியைக் காட்டுமையா ரங்கநாதா
திருப்பதியில் வெங்கடேச ரங்கநாதா — எங்கள்
தீராவினை தீர்ப்பாய் ரங்கநாதா
வைகுந்த வாசனே ரங்கநாதா — கோரும்
வரமருள வேண்டுமையா ரங்கநாதா
ஸ்ரீ ரங்கத் தில்இருக்கும் ரங்கநாதா — நாங்கள்
சிறந்திருக்க வரமருள்வாய் ரங்கநாதா
துளசிகள்தாம் தூவிடுவோம் ரங்கநாதா — எமக்குத்
துணையாக வாருமையா ரங்கநாதா
அமைதியெமக் கில்லையம்மா ரங்கநாதா — எமக்கு
ஆறுதல்நீ செய்யவேண்டும் ரங்கநாதா
சஞ்சலங்கள் போக்கிடவே ரங்கநாதா — பஞ்ச
சன்யமெடுத் தூதிடுவாய் ரங்கநாதா

ரங்கநாதா ... ரங்கநாதா
ரங்கநாதா ... ஸ்ரீ ரங்கநாதா

கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா கோவிந்தா கோவிந்தா

பக்தவத்சலா கோவிந்தா பரமதயாளா கோவிந்தா
பாண்டு ரங்கா கோவிந்தா பிரம்மாண்டநாயகா கோவிந்தா
பஞ்சாயுதனே கோவிந்தா பரிபூரணனே கோவிந்தா
பாற்கடலிற் பள்ளிகொள்ளும் பரமானந்தா கோவிந்தா

பச்சை வண்ணா கோவிந்தா ஸ்ரீ பத்மநாபா கோவிந்தா
பாண்டவர் தூதா கோவிந்தா பாப விநாசா கோவிந்தா
பங்கய பாதா கோவிந்தா உல குண்ட வாயா கோவிந்தா
பாம்பணைமேல் பள்ளிகொள்ளும் பன்னகசயனா கோவிந்தா

துஷ்ட நிக்ரகா கோவிந்தா துளசி தரனே கோவிந்தா
சக்க ராயுதா கோவிந்தா சத்ய நாராயணனே கோவிந்தா
சர்வ காரணா கோவிந்தா சர்வேஸ்வரனே கோவிந்தா
ஷேஷ சயனா தசரத தனயா ஐயம்பிரகாசா கோவிந்தா

கோகில ராமா கோவிந்தா கோவர்த்தன ராமா கோவிந்தா
கோதண்ட ராமா கோவிந்தா கோலாகல ராமா கோவிந்தா
கோசல ராமா கோவிந்தா கோபால கிருஷ்ணா கோவிந்தா
கோகுல ராமா கோசல ராமா கோபிகள் ரமணா கோவிந்தா

நரகரி முரகரி கோவிந்தா நானாவு பாயா கோவிந்தா
நந்த நந்தன கோவிந்தா நர சிம்ம ராமா கோவிந்தா
நீல வண்ணா கோவிந்தா நெடுமா லவனே கோவிந்தா
நித்திய புருடா நிர்மலா காளிங்க நர்த்தனா கோவிந்தா!

கம்ச துவம்சா கோவிந்தா கருட வாகனா கோவிந்தா
கமல பாதா கோவிந்தா கருணா கரனே கோவிந்தா
கார் வண்ணா கோவிந்தா கமலக் கண்ணா கோவிந்தா
கம்ச துவம்சா கருட வாகனா கார்வண்ணா கோவிந்தா

வைதேகி ராமா கோவிந்தா துவாரகை வாசா கோவிந்தா
வாமனா மது சூதனா வராகவ தாரா கோவிந்தா
வேங்கட ரமணா சங்கட கரணா வேந்து விலாசா கோவிந்தா
நித்திய மங்கள கோவிந்தா நிராகுல மங்கள கோவிந்தா
சத்திய மங்கள கோவிந்தா சர்வ மங்கள கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா சர்வ மங்கள கோவிந்தா.

கோவிந்த கோவிந்த நாராயணா — ஜெய
கோபால கோபால நாராயணா
கோபால கோபால நாராயணா — ஜெய
கோவிந்த கோவிந்த நாராயணா
கோவிந்த கோவிந்த நாராயணா — நந்த
கோபால கோபால நாராயணா!

ராமா ராமா— ராமா ராமா
ராமா ராமா— கோகுல ராமா
ராமா ராமா— ராமா ராமா
ராமா ராமா— கோவிந்த ராமா

திண்புயலில் காப்பவனே ராமா ராமா
தீமை தவிர்த் தாள்பவனே ராமா ராமா
கண்ணையிமை காப்பதுபோல் ராமா ராமா
காதலோ டெமைக் காப்பாய் ராமா ராமா
மண்மாரி பொழிகையிலே ராமா ராமா
மலையாகக் குடைபிடிப்பாய் ராமா ராமா
விண்ணவரும் போற்று மொரு ராமா ராமா — பர
வீர்யமெமக் கீந்திடுவாய் ராமா ராமா
பண்ணிறைந்த பாக்களிலே ராமா ராமா — உந்தன்
பச்சைநிறந் தோன்றுதையா ராமா ராமா
நீலக் கடல் அலையில் ராமா ராமா — நீயும்
நிறைவமைதி யாயிருப்பாய் ராமா ராமா
காலச்சக் கரமதிலே ராமா ராமா
கற்பமெலாந் தங்குகுதே ராமா ராமா
அராஉமா மந்திரத்தில் ராமா ராமா
அவ்வும்உவ் வுங்கழித்தே ராமா ராமா
இராமனாய் வந்தெமக்கு ராமா ராமா
இரம்மியம்நீ தந்திடுவாய் ராமா ராமா

ராமா ராமா— ராமா ராமா
ராமா ராமா ஹரே ராமா ராமா!!



## முருகப்பெருமான்

அரகரா குழந்தைவடி வேலா — எங்கள்
ஐயனே மெய்யனே அற்புத கிருபாகரா
அழகனே அமரனே வேலா — எங்கள்
அரணாகு மறிவான சிவஞான போதா
குழகனே அருள்ஞான வேலா — எங்கள்
குகனே மழலைக் குமாரனே வேலா
பழவினை போக்கிடும் வேலா — உந்தன்
பதமாடி வினைசாடி வருகுவாய் முருகா
கழலாடி வருகின்ற முருகா — எங்கள்
கந்தனே சண்முகக் கொண்டலே முருகா
குழலூது கண்ணற் குகந்தோய் — பரந்
குபதேசஞ் செய்திட்ட குருநாதா முருகா
பழமான அன்புக் குமாரா — எங்கள்
பதியா யிருந்தகக் குகைவாச னானாய்
அழகிளமை மணமிக்க முருகா — எங்கள்
அருகாக வந்தெமக் கரணாகு வாயே!

※ ※ ※ ※

அன்பனே அமரனே வா வா — எங்கள்
அறுமுகா மெய்ஞ்ஞானக் குமரனே வாவா
செங்கதிர் வேலனே வா வா — எங்கள்
சேந்தனே செந்தமிழ்க் கந்தனே வாவா
வண்ண மயில் மீதேறி வா வா — நல்ல
வடிவேல வினைதீர ஓடோடி வாவா
கந்தா குகா சண்முகா வா — பன்னீர்
கரங் கொண் டெமைக் காக்க நீயாக வாவா
சிந்தா குலந்தீர்க்கு முருகா — எங்கள்
செந்தையிற் குடிகொண்ட சிங்கார வேலா
முந்தை வினைதீர்க்க வாவா — எம்மை
மூடும் இருள்நலிந் தோடவே வாவா
எந்தைமுரு கேசனே வாவா — எங்கள்
ஏந்தலே இருஞான வேலனே வாவா!

வா வா சண்முகா — வா வா சண்முகா

அன்புமய மானவனே வா வா சண்முகா
ஆனந்தனே யற்புதனே வா வா சண்முகா
மன்னுமுயிர் கள்துணையே வா வா சண்முகா
மாயவினை தீர்த்தருள வா வா சண்முகா
இன்பவடி வானவனே வா வா சண்முகா
ஈசனவன் குருமணியே வா வா சண்முகா
துன்பமெலாந் தீர்ப்பவனே வா வா சண்முகா
தூயசக்தி பாலகனே வா வா சண்முகா
அழகுவடி வேல்முருகா வா வா சண்முகா
அடியரிடர் தீர்த்திடநீ வா வா சண்முகா
இளமைவிஞ்சு பெருமானே வா வா சண்முகா
ஈசுவரன் பாலகனே வா வா சண்முகா
தெய்வமணம் கமழவேநீ வா வா சண்முகா
தேவியரி ருவரொடும் வா வா சண்முகா
பழகுமடி யார்க்கருள வா வா சண்முகா
பக்தரித யங்குளிர வா வா சண்முகா
பழவினைகள் தீர்த்திடநீ வா வா சண்முகா
பாவமெல்லாம் போக்கியேநீ வா வா சண்முகா
அழகுமயில் ஏறியேநீ வா வா சண்முகா
அற்புதவேல் தாங்கியேநீ வா வா சண்முகா

வா வா சண்முகா ... வா வா சண்முகா
வா வா சண்முகா — வா வா சண்முகா

❋ ❋ ❋ ❋

முருகா முருகா ... முருகா முருகா
முருகா முருகா — முருகா முருகா

ஆடிவா முருகா ஆடிவா முருகா
அந்தரத்தில் நின்றொளிர்ந்தே ஆடிவா முருகா
ஓடிவா முருகா ஓடிவா முருகா
ஒய்யார வள்ளியோடும் ஓடிவா முருகா
கூடிவா முருகா கூடிவா முருகா
குலதெய்வ யானையைநீ கூடிவா முருகா
நாடிவா முருகா நாடிவா முருகா

நல்லரெம்மை நாடியாடி யோடி வா முருகா
கூடிவா முருகா கூடிவா முருகா
குலவடியார் கூட்டத்தில்நீ கூடிவா முருகா
சாடிவா முருகா சாடிவா முருகா
சரணடைவார் தம்வினைகள் சாடிவா முருகா
தேடிவா முருகா தேடிவா முருகா
தெண்டனிட்டோ மெங்களைநீ தேடி வா முருகா
பாடிவா முருகா பாடிவா முருகா
பாடுமடிய ரெம்முடனே பாடிவா முருகா
ஆடிவா முருகா ஓடிவா முருகா
கூடிவா முருகா கூடிவா முருகா
கூடிவா முருகா கூடிவா முருகா
தேடிவா முருகா பாடிவா முருகா
ஆடிவா முருகா ஆடிவா முருகா
ஆடுமயில் மீதேறி ஆடிவா முருகா
ஓடிவா முருகா ஓடிவா முருகா
ஓடிவா முருகா ஓடிவா முருகா

முருகா முருகா! முருகா முருகா!
முருகா முருகா! முருகா முருகா!

இகசுக மடியருக் கருள் வோனே
இடுக்கண் களைந்தருள் தருவோனே
பரசுக மெமக்கருள் பகவானே
பகலிர வாயெமைக் காப்போனே
இலம்பைகள் நீக்கிடும் இளையோனே
இருள்தீர்த் தொளிரும் இறையோனே
தலம்பல புக்கருள் தருவோனே
தக்தக வெனவொளிர் அயிலோனே
கருணை பொழிந்திடு மாமழையே
ககனத் தொளிர்கரு ணாகரனே
வெருவவர் தமையெரி வேலவனே
வெற்றிகள் தருமொரு வேற்கரனே
குருவடி வாகிய குமரேசா
குன்றுதொ றாடிடும் கொற்றவனே
அரகர சரவண குகபாலா
அடரிருள் போக்கிடு மற்புதனே

மயில் மிசை யேறிடு மாண்பினனே
மலரடி தொழவினை மாய்ப்பவனே
அறுமுக வடிவின னான வனே
அழகொளி ரபயக ரத்தவனே!

இராகம்: சண்முகப்பிரியா தாளம்: திஸ்ரம்

அருவு முருவு மருவு ருவமு
முடைய அரிய பெருமானே
அபலை யெனது கவலை முழுது
மகல அயிலை விடுவாயே
பெருகு பிணிக ளுலவு பிறவி
மடவி யெரிய வடிவேலை
விடுக விடுக அமல விமல
விரையு மயிலின் விறல்வீரா
பருவ வெழிலொ டொளிகொ ளழக
பரம குமர பரஞானா
பழனி மலையொ டெனது முனரெ
வருக வருக வடிவேலா
இருளை யொழிய வினிய வொளியை
இருநி லமதி லறியாதே
கருகு மடியெ னறிவு பெருகக்
கனக மயிலில் வருவாயே!

மயிலி லமரு மழக வுனது
மகிமை யதனை யறிவோமோ
மழலை முருக வுனது கருணை
மழையை யிவணி பொழிவாயே
கயிலை மலையி லுறையு மரனின்
கனியை யடைய வுலகத்தைக்
கடுகி வளையு மொருவ வுனது
கழலை யடைய வருள்வாயே
மயிலை யழகி லிகலு குறவன்
மகளை யுனது மணமார
அடவி யிதனி லணைய் வதுவை
புரியு மரிய மணவாளா
அயிலை யொருகை தொடுமொ ரிறைவ
வமர குமர அடியேற்காய்
அசையு மயிலி லினிய மகளி
ரிருவ ரிணைய 'வருவாயே!

அழகு இளமை யறிவோ டுறைமை
கமழு மணமு மதில்சேரும்
அழக குழக மதன குமர
அமர பரம குருநாதா
முழவ மதிர மகளிர் சிறுவர்
முரலு மினிய விசையூடே
பயிலு நடன மயிலி லழகு
தவழ வருக முருகோனே
மழலை பொழியு மிளமை யழகை
மனித ருணர வருவோனே
சுழலு முலகி லுயர வளரச்
சுகம தருளி வரவேணும்
பழமை கொளுமொ ரயிலி னுரிமை
பகரு முருக வடியார்கள்
தொழவு மழவு மழகு கழலில்
விழவு மருளைப் பொழிவாயே!

❋ ❋ ❋ ❋

வேல் — வேல் .. வேல்...
வேல்... வேல் .. வேல் .

ஆறுபடை வீடுடையாய் வேல் வேல் வேல்
ஆதிசக்தி பாலகனே வேல் வேல் வேல்
கூறுமடி யார்வினைதீர் வேல் வேல் வேல்
குன்றேறி நின்றிலங்கும் வேல் வேல் வேல்
தேறுமதி விற்றெளிவே வேல் வேல் வேல்
தென்றலென வந்தருளும் வேல் வேல் வேல்
தீராத வினைதீர்க்கும் வேல் வேல் வேல்
திருக்கரமீ ராறுடையாய் வேல் வேல் வேல்
ஆராத இன்பமெவற்பே வேல் வேல் வேல்
அடியரிடர் தீர்ப்பவனே வேல் வேல் வேல்
முந்தைதவினை தீர்த்தருளும் வேல் வேல் வேல்
முச்சக்தி யாம்முருகா வேல் வேல் வேல்
கந்தா குகாமுருகா வேல் வேல் வேல்
காங்கேய னேகடம்பா வேல் வேல் வேல்
சற்குணனே சரவணனே வேல் வேல் வேல்
சத்குருசங் காரவடி வேல் வேல் வேல்
வீராவே சப்படையே வேல் வேல் வேல்
விண்ணவிருந் தாடுசக்தி வேல் வேல் வேல்
மந்திரமா சத்திவடி வேல் வேல் வேல்

மாயசூர னைவதைக்கும் வேல் வேல் வேல்
வெற்பினைப் பிளந்தெறியும் வேல் வேல் வேல்
வெவ்வினையின் வேரறுக்கும் வேல் வேல் வேல்
நொந்தவர்க் கிரங்குமொரு வேல் வேல் வேல்
நோய்நொடிகள் தீர்க்குமருள் வேல் வேல் வேல்
அள்ளக்குறை யாவமுதே வேல் வேல் வேல்
அழகிளமை மணமுடையாய் வேல் வேல் வேல்
பன்னப்பன் னவினிக்கும் வேல் வேல் வேல்
பத்தர்களைக் காத்தருளும் வேல் வேல் வேல்
மண்டலங்க ளெங்குநிறை வேல் வேல் வேல்
மன்பதைக்கு மாமருந்தே வேல் வேல் வேல்
சண்டமாரு தப்புயலே வேல் வேல் வேல்
சத்யவித்ய நித்யகுகா வேல் வேல் வேல்
அண்டுமடி யார்வினைதீர் வேல் வேல் வேல்
ஆணவத்தை நின்றறுக்கும் வேல் வேல் வேல்
அண்டபிண்ட மானசத்தி வேல் வேல் வேல்
அங்குமிங்கு மெங்குமொளிர் வேல் வேல் வேல்
உன்னற்க ரும்மறையே வேல் வேல் வேல்
உத்தண்ட கெம்பீர வேல் வேல் வேல்
அந்தரத்தி லாடுமொளி வேல் வேல் வேல்
அந்திசந்தி தனிலொளிரும் வேல் வேல் வேல்
மும்மையுமெ மைத்தொடரும் வேல் வேல் வேல்
மூதறிவே யானசத்தி வேல் வேல் வேல்
எம்மையுணர் வித்தருளும் வேல் வேல் வேல்
ஏகபோக ஞானசத்தி வேல் வேல் வேல்
துள்ளிக்கு தித்துவரும் வேல் வேல் வேல்
துரியபதந் தந்தருளும் வேல் வேல் வேல்

வேல் வேல் வேல் ... வேல் வேல் வேல் .. வேல் வேல் வேல் ..
வேல் வேல் வேல் ... வேல் வேல் வேல் ... வேல் வேல் வேல் ..





## இணுவை,

## நொச்சியொல்லைக் கந்தன் கழலுக்கு...

பதியிற் பழமைப் புகழ்சேர் பதியாம்
இணுவிற் கரசே யிருஞானப்
பழமென் றடியார் பரவித் துதிசெய்
பரனே குமரப் பெருமானே
விதியிற் பழுதுற் றிழிமைப் படுவோர்
விடிவிற் கொருபே ரொளியாகி
விழுவா ரழுவார் விழிநீர் பொழிவார்
வினைதீர் வடிவேற் பெருமானே
மதியொன் றிலையென் றுணையே தொழுவார்
கனவிற் றெளிவுற் றருளாடுங்
கருணைக் கடலே மயில்வா கனனே
கலிதீர்த் தெமையாண் டருள்வாயே
அதியற் புதமுற் றொருநற் கனவிற்
றனதுற் பவமன் றுரைசெய்தே
யருணொச் சியொலைப் பதிபுக் கமரும்
அழகா மயில்மேல் வருவாயே!

## வைரவ சுவாமி

அண்டந் துளங்கவிண் மண்டலங்க ளும்நடுங்க
அப்பன் குதிகுதித்தே யாடுகின்றார்
சண்டப் ரசண்டமென விண்டகொடுங் காலனெனச்
சந்ததங் கடுகடுப்போ டாடுகின்றார்
கண்கள் பொறிபறக்கப் பற்கள்நற நறவென்று
கர்ச்சித் தலையலையாய்ப் புகைக்கிறார்
தண்டம் எடுத்துநட னங்கள் புரிந்துபல
தலங்களையுங் காத்தபடி யாடுகின்றார்.

கடகடென்றே யாடுகிறார் கண்கள் எரிபறக்கக்
காரிருள் வைரவருலகைக் கலக்குகிறார்
விடுவிடென்றே காலாடி விண்ணினர் கதிகலங்க
வீரமொடு வேற்றினரை விரட்டுகிறார்
திடுதிடென்றே தோன்றிமறைந் தெங்குஞ் சுழன்றாடித்
திணபுயங்கள் தட்டியுச்சத் தொனிகொட்டிறார்
இடியிடித்தே மின்னல்மழை கொட்டுவபோ லுலகாட்டி
யென்றும் எழுச்சிகொண்டே யெக்களிக்கிறார்.

சுற்றிநிற்கும் பூதகண மத்தனையு மதிசயிக்கச்
சோதிசொ ரூபமதைக் காட்டுபவரே
கற்றவர்கள் கண்டுன்னைக் காலகால னேயென்று
கண்ணீர் வடித்தழுது போற்றுகின்றார்
சற்றுத்தெ ளிந்துன்னை யுற்றுணர்ந்து பார்க்கையிலே
சாட்சாத் சிவனவனின் சாயல்ஆடுதே
முற்றும்அ றிந்துன்னை முதுஞானத் தென்றலென்று
முன்வந் தடிபணிந்து போற்றுவோமே — உந்தன்
முளரிபதத் துணைவேண்டிப் போற்றுவோமே!

பத்திகொண் டடிபணிந்து பத்தர் பரவுமந்தப்
பண்டைப் பரம்பொருளின் மறுதோற்றமோ
சத்தியத்தின் சாயலிலே யுற்றொளிர் சதாசிவனோ
சங்கரனோ சங்கார ருத்திரர்தானோ
பத்தியொடு போற்றுகிறோம் பாமாலை சூட்டுகிறோம்
பரவசப்பட் டுன்னடியிற் றலைசூட்டுவோம்
நத்திவழி பட்டிடுவார் புத்தியிலு தித்தபடி
நாளுந் துதித்துன்னைப் போற்றுவோமே — யுந்தன்
நறுமலர்த்தாட் புகழ்பாடி யேத்துவோமே!

அங்கம்புள கித்தார்வம் பொங்கிட விரைந்தாடும்
ஐயனே சிவபால வைரவஸ்வாமி
பொங்கல்மடை வைத்திடுவோம் பூமாலை சூட்டிடுவோம்
புகழ்பாடி யாமுன்னைப் போற்றிடுவோம்
தங்கத்திரி சூலமொடு தண்டமு மெடுத்தெம்முன்
தரிசனமுந் தந்திடுவை வைரவஸ்வாமி
சங்கமு ழக்கிடுவோம் சல்லாரி கொட்டிடுவோம்
சதிராடி முன்னடைவாய் வைரவஸ்வாமி—யுன்னைச்
சரணடைந்தோம் காத்திடுவை வைரவஸ்வாமி!

## மங்களம்

எங்கணும் நிறைந்திலங்கு மைங்கரர்க்கு மங்களம்
ஏகநாத னாயகைலை வாசனுக்கு மங்களம்
பொங்கும்அருள் சிந்துமிறை சத்தியர்க்கு மங்களம்
பொங்கரவ மீதுறைஸ்ரீ ரங்கனுக்கு மங்களம்
தங்குபுகழ்க் கொண்டல்ஞான வேலவர்க்கு மங்களம்
தாய்காளி நாகசத்தி வைரவர்க்கு மங்களம்
தங்கியுள்ளத் துண்ணிறைந்த தர்மஆத்ம சக்கரமாம்
சாசுவத மானசத்யத் தேவனுக்கு மங்களம்

''ஆத்மநல் லுணர்வு மேவ
அடியனேன் தருமிப் பாடல்
கோத்துநல் லச்சில் நெஞ்சம்
குளிர்ந்திடத் தந்த ஆம்ம
காத்மவச் சகத்தர் மற்றாங்
கணைந்தயா வர்க்கும் நன்றி
ஆத்மபூ ரணமாய்த் தந்தே
அமைகுவன் வாழி! வாழி!''

தெ. கோபாலசிங்கம்

உருகிய மனத்தால் பாடிப் பரவிடின்
கருங்கல்லுங் கடவுளாகிக் காட்சி நல்கும்

ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்